[illegible]

V 6 No 26 6 [illegible] 1933

JL
ത211, N28 KH
N33·6·26.
189150

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

16 JAN 1937

Vol 6.] 1933 ஆ ஜூலை மீ 6வ. [No. 26

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 501
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 503
3. காற்றுமழை (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's Tempest 506
4. அப்பர் (64-கலை, வியாகரணம்-திணையும்-பாலும்)
E. N. தணிகாசல முதலியார், B.A.,B.L., 508
5. கலித்தொகை (பாலைக்கலி, 15)
T. A. கனகசபாபதி முதலியார் 509
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 4-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 510
7. யாப்பிலக்கணம் (விருத்தம்-வெளிவிருத்தம்)
வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 511
8. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 512
9. பொதிகை நிகண்டு (பகரவர்க்கம்)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 515
10. வர்த்தமானம் 516

கலாநிலயம்

189158

கலாநிலயத்தைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்தி வருவதற்கு நாம் செய்கின்ற முயற்சிகள் திருவருளை முன்னிட்டு நிறைவுபெறலாம் என்னும் நம்பிக்கை தோன்றலால் இன்று மீண்டும் இவ்விதழ் வெளிவரலாகின்றது. காலவளவில் யாம் நான்கு மாதங்கள் பிந்தியிருக்கும்படி நேர்ந்துளதேயாயினும் இவ்வாண்டிற்குரிய எஞ்சிய இதழ்கள் இருபத்தைந்தையும் மிகமிக விரைவில் ஒன்றன்பின் ஒன்றாய் வெளிக்கொணர்ந்து முடித்துப் பின் அவ்வவ்வாரத்திற்குரிய இதழை அவ்வவ்வாரம் வரும்படிசெய்யும் செவ்வியை இரண்டு மூன்று மாதங்களுக்குள் எய்திவிடவேண்டுமென்பது எமது விருப்பம்.

இருபது பக்கங்கள் இல்லாமல் இனி நமது கலாநிலயம் பதினாறு பக்கங்களே கொண்டுவரும். ஆயினும் நமது நண்பர்கள் ஓதுவதற்கு விழைகின்ற விடயங்கள் குறைவுபடா. இதுகாறும் நம் இதழ்களிற் றோன்றிய விளம்பரங்களில் சிற்சில தவிர ஏனையவற்றை எடுத்துவிட்டு வர்த்தமானத்தையும் சுருக்கிவிட நினைத்திருக்கின்றோம். இதனால் பக்கங்கள் குறைந்தாலும் கட்டுரைகள் அளவிலேனும் வகையிலேனும் குறைவதின்றிக் காக்கப்படும். இதற்கிணங்க வருட சந்தாவிலும் எட்டு அணா குறைத்து, இவ்வாண்டு ஜூலை மாதத்திலிருந்து உள் நாட்டிற்கு ரூ. 7 ஆகவும் அயல்நாடுகளுக்கு ரூ. 9 ஆகவும் மாற்றியிருக்கின்றோம். எனினும் சென்னை நகரிலும் காஞ்சீபுரத்திலும் மாத வீதமாகச் சந்தாவைச் செலுத்துகின்ற நண்பர், பண்டை முறைப்படியே கிளேஸ் இதழிற்கு மாதம் 10 அணா வீதமும், ரப் காகித இதழிற்கு மாதம் 8 அணா வீதமும் தயைசெய்து செலுத்திவரும்படி வேண்டப்படுகின்றனர். மாத மாதம் இத்தொகைகளைச் சிறிது சிறிதாகப் பெறுவதற்கு எங்களுக்கு ஆள்செலவு அதிகமாகின்றது. ஆதலின் இச்சிறிய குறைவை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்று மதிக்கின்றோம்.

இனி, இவ்வாண்டுச் சந்தாத் தொகையை முழுதும் கட்டியிருக்கின்றவர்கள் இவ்விகிதப்படி தங்கள் அடுத்தவாண்டுச் சந்தாவில் இவ் வாறுமாதங்களுக்குரிய 4 அணாவைக் குறைத்துக்கொண்டு அனுப்பலாம்.

மீண்டும் இக்கலாநிலயம் வெளி வருவதற்கு இயன்றபடி புதிய சந்தா நண்பர்கள் பலர் சேர்த்துத் தந்தும் முன்னைய வருடத்துத் தொகுதிகளை விற்றுக் கொடுத்தும் உண்மை ஆர்வமோடு உதவிவருகின்ற எமது நண்பர் கானாடுகாத்தான்-ஸ்ரீமான் சா. ராம. சித. ஜம்புலிங்கம் செட்டியார் அவர்களோடு, அவரது சகோதரர்கள் சா. ராம. சித. பழனியப்ப செட்டியார், சா. ராம. சித. அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும், லக்ஷ்மிபுரம்-ஸ்ரீமான் ந. சொ. அரு. அருணாசலம் செட்டியார் அவர்களுக்கும் நாம் சால நன்றியுடையவர்களா யிருக்கின்றோம். இப்பத்திரிகை இனி இடையூறடையாமல் தொடர்ந்து நடப்பதற்குப் பற்பல விடங்களிலிருக்கின்ற கலாநிலய நண்பர்களிடமிருந்து இத்தகைய உதவி மிக விரைவில் கிடைக்கவேண்டியது இன்றியமையாததா யிருக்கின்றது. அன்னோர் மிக விரைவில் தங்கள்தங்களா லியன்றவளவு உண்மையன்போடு முயன்று ஜூலை மாதத்திலிருந்து துவக்கும்படியாகச் சந்தாதார்களைச் சேர்த்து எமக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகின்றோம்

இக்கலாநிலயம் வாயிலாக எமக்கு வாய்த்திருக்கும் உறவினால் இவ்வுரிமையை வேண்டத் துணிகின்றோமல்லது வேறன்று. இதுபற்றி விரைந்து செய்கின்ற உதவி அனைத்தும் காலத்தாற் செய்த நன்றியாகும்.

சென்னையிலும், காஞ்சீபுரத்திலும் சந்தாவை மாத விகிதமாகச் செலுத்தலாமாதலின் இவ்விரு நகர்களிலும் கலாநிலயத்தின்பால் நல்லெண்ண முடைய நண்பர்கள் புதிய சந்தா நண்பர்களை இணங்கக்கொள்வது பின்னும் எளியதாகும். இப்பொழுது நாம் மீண்டும் பத்திரிகையைத் துவக்குகின்றோமெனின் அது இதுகாறும் நாமடைந்த நஷ்டங்களையெல்லாம் ஈடுசெய்துவிட்டோம் என்பதாலன்று. இனியேனும் மேன்மேல் நஷ்டமே தொடராமல் நடத்துவதற்கு வேண்டிய உதவிகளை, கலாநிலயம் செய்யும் கருமத்திலும் அதன் வகையிலும் மக்களுக்கு நன்மையுண்டென்று உறுதிகொண்டுள்ள அன்பர்கள் தாழாமல் தந்தளிப்பார் என்னும் நம்பிக்கையே எம்மை இக்கருமத்தில் தூண்டியிருக்கின்றது. இதனை இழவாமல் காப்பது அன்னவர்தம் கடமையெனல் மிகைபட வுரைத்ததாகலாமாயினும், இதனை மற்றவர்க்குப் பயன்படுத்தித் தரவேண்டும் என்னும் கருணையே முன்னின்று தூண்ட வேண்டுமெனல் தகவுடன் உரைத்தபடியாகும்.

கலாநிலயம் தன்னுடைய கருமத்தை இயற்றுவதில் பத்திரிகை அளவினோடு நிற்காமல், தமிழ் வகுப்புக்கள் மூலமாகவும் முயன்று வருகின்ற முறைமை இன்னும் சில நண்பர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். தமிழாய்ப் பிறந்த பெருமை அம்மொழியில் உள்ள காப்பியங்களின் அருமையை உணர்ந்து, அவ்வுணர்விற்கு இணங்கத் தம் வாழ்க்கையை வகைசெய்துகொள்வதால் பெருகுதல் வேண்டுமெனக் காட்டிவருவது இக் கலாநிலயம் நிறுவமுயல்கின்ற உறுதிகளில் முதன்மையான தென்பதை எமது நண்பர்கள் ஐயமற அறிந்திருப்பார். இந்த நோக்கம் அநேகம் அநேகரை எட்டும்பொருட்டே நம் கலாநிலயத் தமிழ்க் கழகங்கள் ஆங்காங்கு நிறுவப்பெற்று, பாடங்கள் நடந்துவருகின்றன. சென்னை நகரின் பல பாகங்களில் பத்து மாதங்களுக்குமுன் ஆரம்பமாகிய இக் கழகங்கள் நடைபெறும் காலமும் இடமும் பின்வருமாறு:—

1. சென்னை எஸ்பிளனேட் Y. M. C. A. கட்டிடத்தில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மாலை 5-30 முதல் 6-15 மணி வரையில் வகுப்புக் கூடும். நளவெண்பாவும், பாரதத்தில் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும் முடிந்து இப்பொழுது இராமாயணம் பாலகாண்டம் நடக்கின்றது. இரண்டொரு வாரங்களில் இது முடிந்ததும் அயோத்தியா காண்டம் ஆரம்பிக்கப்படும்.

2. சென்னை, சிந்தாதிரிபேட்டை அருணாசலமுதலி தெருவில் இருக்கும் கார்ப்பொரேஷன் பாடசாலைக் கட்டிடத்தில் ஒவ்வொரு வாரமும், செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மாலை 7-மணி முதல் 8-மணி வரையில்—பாடம் அதுவே.

3. சென்னை, இராயப்பேட்டை அம்மையப்ப முதலி தெருவில் இருக்கும் கார்ப்பொரேஷன் பாடசாலைக் கட்டிடத்தில், திங்கள் வியாழக் கிழமைகளில் 6-45 மணி முதல் 7-30, வரையில்—பாடம் அதுவே.

4. சென்னை வியாஸர்ப்பாடியில் உள்ள கார்ப்பொரேஷன் பாடசாலைக் கட்டிடத்தில் ஒவ்வொரு வாரமும், புதன் சனிக் கிழமைகளில் 6-30 முதல் 7-15 வரையில்—நளவெண்பா நடைபெற்று முடிந்து கிருஷ்ணன் தூதுச் சருக்கம் ஆரம்பமாகி யிருக்கின்றது. இவ்வகுப்புத் துவக்கி நான்குமாதங்களே ஆகின்றன.

[வண்ணாரப்பேட்டையில் நடந்த வகுப்பு Y. M. C. A. வகுப்புடனும், மாம்பலத்தில் நடந்த வகுப்பு இராயப்பேட்டை வகுப்புடனும் சேர்க்கப்பட்டன.]

சென்னை, பெரம்பூரில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த தமிழ் வகுப்பு, பாடங்கள் எல்லாம் நடந்து, முடிவடைந்துகொண்டு வருகின்றது. அங்கு, நளவெண்பா, வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம், அஷ்டப்பிரபந்தம், நைடதம், அயோத்தியாகாண்டம், புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய இந்நூல்களின் சிற்சில பாகங்கள் பாடமாய் நடத்தப்பட்டன. இலக்கணத்தில், எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு இவைகளும் ஓரளவு கற்பிக்கப்பட்டன.

சென்னையிலுள்ள இவ் வகுப்புக்களில் 300 பேர்களுக்குமேல் கற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் பற்பல தொழில்களிலும் உத்தியோகங்களிலும் அமர்ந்திருப்பவர். இவ்வகுப்புக்களிலுள்ளவர்கள் சம்பளம் யாதும் செலுத்த வேண்டுவதில்லை. எமது நண்பர் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. பாடம் நடத்துகின்றார்.

காஞ்சீபுரம்:—இங்குத் தமிழ் வகுப்புக்கள் ஆரம்பமாகி ஒன்றரைமாதம் ஆகின்றது.

1. பெரிய காஞ்சீபுரத்தில் வைகுண்டப் பெருமாள் தெருவில் உள்ள முனிசிபல் பாடசாலையில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் வியாழக் கிழமைகளில் மாலை 6-30 முதல் 7-30 வரையில் பாடம் நடக்கின்றது. இப்பொழுது நடக்கும் பாடம் நளவெண்பா.

2. சின்ன காஞ்சீபுரம் செட்டித் தெருவிலுள்ள பாடசாலைக் கட்டிடத்தில், புதன் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-30 முதல் 7-30 வரையில் வகுப்புகள் நடக்கின்றன. பாடம்—நளவெண்பா.

விரைவில் ஹாட்ஸன் பேட்டையில் மற்றொரு வகுப்பு ஆரம்பமாகும். இவ் வகுப்புக்களில் இதுவரையில் 60 பேர்களுக்குமேல் சேர்ந்திருக்கின்றனர். இவர்களும் பற்பல உத்தியோகங்களிலும் தொழில்களிலும் அமர்ந்திருப்பவர்களே. இவ்வகுப்புக்களில் சேர்பவர்களுக்கும் சம்பளம் யாதுமில்லை. நமது உதவி ஆசிரியர் ஸ்ரீவான். K. இராஜகோபாலாசாரியார் அந் நகரிலேயே தங்கிப் பாடம் நடத்தி வருகின்றார். இவ் வகுப்புக்கள் இரண்டு வருடங்களுக்குள் முடிவடையும்.

காரைக்குடிகோத்தான்:—இங்கு நம் வகுப்பு இரண்டு மாதங்களுக்கு முன் ஆரம்பமாயிற்று. வாரம் விட்டு வாரம், சனி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை மாலை இருவேளைகளிலும், சா. ராம சித. ஜம்புலிங்கம் செட்டியார் அவர்கள் மனையில் நடைபெற்று வருகின்றது. தமிழும், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு ஆங்கிலமும் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. இப்பொழுது தமிழில் நளவெண்பாவும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகம் ஜூலியஸ் ஸீஸரும் ஆரம்பமாயிருக்கின்றன. 30 பேர் வரையில், கானாடுகோத்தானிலும் அதற்கடுத்த ஊர்களிலுமிருந்தும் நாட்டுக்கோட்டைச்செட்டிமார்கள் சேர்ந்திருக்கின்றனர். இவர்களும் சம்பளம் யாதும் செலுத்த வேண்டியதில்லை. ஸ்ரீமான் T.N. சேஷாசலம் ஐயரவர்கள் 15 தினங்களுக்கொருமுறை சென்னையிலிருந்து சென்று இரண்டு தினங்கள் தங்கிப் பாடங்களை நடத்தி மீள்கின்றார். அடுத்த முறை அங்கு நவம்பர் மாதம் 18, 19 தேதிகளில் வகுப்புக் கூடும்.

சென்னையிலும் காஞ்சீபுரத்திலும், செட்டி நாட்டிலும் உள்ளவர் தங்கள் நண்பர்களை இந்த வகுப்புக்களில் வந்து சேர்ந்துகொள்ளும்படி செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

குறிப்பு:—இவ்விதழ் ஜூலை 6-ந் தேதி தாங்கியுள தேனும் இவ் வகுப்புகளைப்பற்றி யுரைத்தவை நவம்பர் மாதம் முதல்தேதிக் குரியனவாம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[497-வது பக்கத் தொடர்ச்சி]

வெகுளவும் வேண்டும் பிறர்பொருட் டன்றே.

மாயஞ்செய் மானுகி வந்த அந்நிருதன் மாயாமுன் பிளிறிய பேரொலி செவிசேர்தலும் சீதை, குயிலொன்று தரையில் துடித்து வறிதே வீழ்வதுபோல் வயிறலைத்து வீழ்ந்து மயங்கி,

> பிடித்து நல்கிவ் வுழையெனப் பேதையேன்
> முடித்த னென்முதல் வாழ்வென மொய்குழல்
> கொடிப் படிந்த தெனநெடுங் கோளரா
> இடிக்கு டைந்த தெனப்புரண் டேங்கினாள்

[பூங்கொடி யொன்று தரையிற் சாய்ந்தது போலவும், நீண்ட வலிய ஓர் பாம்பு இடிமுழக்கம் கேட்டு நடுங்கியது போலவும், அடர்ந்த கூந்தலையுடைய அவள், தரையில் புரண்டு, "இந்த மானைப் பிடித்துக் கொடு என்று கேட்டு அறிவில்லாத நான் வாழ்வையெல்லாம் முதலோடு முடித்துவிட்டேன்," என்று புலம்பினாள்.]

புலம்பியவாங்கே அவள் இலக்குவனை இரங்கி நோக்க, அவ் விளையோன் வெருவந்தபான்மை யாதுமின்றித் துன்பமுந் தோன்றாமல் நின்றனன் போலும். அன்றியும், அாற்றியது மாய அரக்கனே என்னத் தன்னைப்போல் பிறரும் ஐயமற வுணர்தலே கடனெனுஞ் சிந்தனையிற் றீர்ந்த இவ்விளவல், "மாயமே இம்மானென முன்னறிந்து மொழிந்த யானே வல்லன்" என மகிழ்ந்து, "அது மெய்யாயிற்று, கண்டீர்" என்பான் போல் பிறங்கு முகத்தினனாய் நகையாடு மிதமோடும் தோன்றியிருத்தலும் அன்னவன் இயற்கைக்கு அயலாய பரிசன்று. ஆதலால், கொழுந்தன் நிற்கும் இந்நிலை கண்டு குமுறுகின்றாள் அப்பேதை; குமுறி, துன்பமும் வன்மமுந் தொடர்ந்து பாய்கின்றதேனும், உயர்குலச் செம்மையின் வரம்புகடவா நாவின் நயமுடன்,

> குற்றம் வீந்தகு ணத்தினெங் கோமகன்
> மற்றை வாளரக் கன்புரி மாயையால்
> இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
> நிற்றி யோவிளை யோயொரு நீயென்றாள்

[குற்றமற்ற குணங்களையுடைய எம் தலைவன், கொடிய அரக்கன் செய்த மாயையால் உடைந்து வீழ்ந்தான் என்ன அறிந்தும், உதவிக்குச் செல்லாமல், என் பக்கத்தில் நிற்கின்ற இளையோய், நீ ஒருவனோ, என்றாள்.]

"என்னயல் நிற்றியோ ஒரு நீ" என்ற அம்மெல்லிய சொற்களு டடங்கிய வன்மையை இலக்குவன், பாவம், அறியகில்லான். தன்னைப் பையப்பைய வைகின்றாள் என்பது தேராமல் இராமனுக்கே இவள் வீணே இரங்குகின்றாளெனப் பிறழமதித்து, அவளைத் தேற்றத் தலைப்படுவானாகி,

> எண்மையா ருலகினி லிராமற் கேற்றமோர்
> திண்மையா ருளரெனல் செப்பற் பாலதோ
> பெண்மையா லுரைசெயப் பெறுதி ராலென
> உண்மையா னனையவட் குணரக் கூறினான்

[எளிமை வாய்ந்த இவ்வுலகத்தில், இராமனைக் காட்டிலும் வலிமையுடையவர் இருக்கின்றாரென்பது சொல்லவுந் தகுமோ. நீர் பெண்ணா யிருக்கின்றபடியால் இப்படிச் சொல்லலானீர், என்று உண்மையாளனாகிய அவன் அச்சீதைக்கு உணர்த்துபவன் ஆயினான்.]

இலக்குவன் புதியதொன்றும் இயம்பவில்லை; இராமன்றன் ஆண்மையையே பரக்கப் பேசினான்.—

> ஏழுமே கடலுல கேழு மேழுமே
> சூழுமேழ் மலையவை தொடர்ந்த சூழல்வாய்
> வாழுமே மையர்சிறு வலிக்கு வாளமர்
> தாழுமே யிராகவன் றனிமை தையலீர்

[தையலீர், எழு கடல்களும், பதினான்கு உலகங்களும், எழு மலைகளும், ஆகிய இவைகளைச் சார்ந்த இடங்களில் வசிக்கின்ற, அற்ப ஜீவன்களினுடைய சிறிய வலிமைக்கு இரகுகுல இராமனது தனிமைதான் கொடிய போரில் குறையுமோ]

> பாரெனக் கனலெனப் புனலெ னப்பகாப்
> பேரெனத் திசையென முனியிற் பேருமால்
> காரெனக் கரியவக் கமலக் கண்ணனை
> யாரெனக் கருதியிவ் விடரி னாழ்கின்றீர்

[பூமியும் அனலும் நீரும் காற்றும் திசைகளும் இராமனது கோபத்திற்கு நிலைநிற்கமாட்டாமல் குலையும். ஆதலால், மேகம்போன்ற கரிய நிறமும் தாமரை போன்ற கண்களையும் உடைய அவனை யாரென்று நினைத்து இந்தத் துன்பத்தில் அழுந்துகின்றீர்.]

> இடைந்துபோய் நிசிசாற் கிராம னெவ்வம்வந்
> தடைந்தபோ தழைக்குமே யழைக்கு மாமெனின்
> மிடைந்தபே ரண்டங்கண் மேல கீழன
> உடைந்துபோ மயன்முத லுயிருந் தீயுமால்

[இராமன் ஒரு அரக்கனுக்குத் தோற்று அவமானம் நேர்ந்தபோது பிறரைத் துணைக்குக் கூப்பிடவும் கூப்பிடுவானோ! அவ்வாறு கூப்பிட நேருமானால், நெருங்கிய பெரிய அண்டங்களெல்லாம் தலைகீழாகி உடைந்துபோம், பிரமன் முதலிய உயிர்களும் பொசுங்கிப் போகும்]

> மாற்றமென் பகர்வது மண்ணும் வானமும்
> போற்றவன் திரிபுர மெரித்த புங்கவன்
> ஏற்றிநின் றெய்தவில் லிற்ற தெம்பிரான்
> ஆற்றலி னமைவதோ ராற்ற லுண்மையோ

[சொல்வதற்கு யாது உளது. பூமியிலுள்ளவரும் தேவரும் பாராட்டும்படி வலிய முப்புரங்களை எரித்த சிவபிரான், நாணேற்றி நின்று எய்த வில் இராமபிரானது வலிமையால் உடைந்ததென்றால் அவன் வலிமைக்கு நிகரான வலிமை அமையக்கூடுமோ]

காவல னீண்டுநீர் கருதிற் றெய்துமேல்
மூவகை யுலகமு முடியு முந்துள
தேவரு முனிவரு முதல செவ்வியோர்
ஏவரும் வீந்துளா ரறமு மெஞ்சுமால்

[இராமன் இப்பொழுது நீர் எண்ணியதை அடைவானால், மூன்று உலகங்களும் அழியும், முதன்மையாக உள்ள தேவர் முனிவர் முதலிய சிறப்புவாய்ந்தவர் யாரும் இறந்தவராவார், தருமமும் தாழ்ந்து அழிந்தது ஆகும்]

நாநயம் நனியுடையோர் நந்தங் கம்பர் பாத்திரங்கள். 'இராமனும் போர்தோற்று உயிரிழப்பானே யாயின்' என்று வாய்வைத்தியம்பக் கூசிய இலக்குவன், "நீர் கருதிற் றெய்துமேல்" எனப் பகர்ந்தது புதுமையன்று. "நான் இராமனுக்கு முடிசூட்டி வனத்தைச் சேர நினைக்கின்றேன், உங்கள் கருத்து யாது" என்று கேட்ட தயரதனுக்கு, 'வனஞ்செல்' எனச் சொல்ல இசையாமல், "இராமனை அரசனாக்கிப் பின் அப்புறத்து அடுத்தது புரிவாய்" எனச் செப்பிய சுமந்திரனுக்கும், "இராமனை வனத்திற்கு ஓட்டவேண்டா" எனத் தன் புதல்வனது பெயருடன் கொடிய கானகத்தைச் சேர்த்துப் பகரவுந் துணியாமல், "பெறுவாயேல், இரு வரங்களில் மண்ணேகொள் மற்றையதொன்றை மற" எனக் கைகேயியை வேண்டிய தயரதனுக்கும் இடையே வளர்ந்த இவ்விளவல்,'கருதிற் றெய்துமேல்' என்பதன்றி வேறுவகை விளம்புதல் அருமை. அன்னவன் மேலுஞ் சொல்லுவான்,

பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
துரக்கவங் கதுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கனவ் வுரையெடுத் தரற்றி னானதற்
கிரக்கமுற் றிரங்கலி ரிருத்தி ரீண்டென்றான்

[இன்னும் விரிவாகச் சொல்வானேன். பெருமகன் இராமன் அங்கு அம்பு எய்ய அதுபட்டு வலிதொலைந்து சோர்கின்ற அந்த அரக்கன் அந்தச் சொற்களைக் கூவினான். அதற்கு மனமிரங்கி வருந்தாமல் இவ்விடத்தே இருக்கக் கடவீர், என்றான்]

தன்னொரு அண்ணன்றன் அடலாண்மை யாற்றலை எடுத்து இலக்குவன் இத்துணைப் பரக்கப் பேசியதைக் கேட்டாளேனும், சீதை, பின்னர் இதனை இராவணனுக்குச்சாற்றக் காத்துவைத்தனளன்றி இங்கு இதன் உண்மையைச் சிறிதேனும் ஏற்றுக்கொண்டாளல்லள். "பெண்மையால் உரைசெயப் பெறுதிர்" என்று வணக்கமுடன் இலக்குவன் கூறினானேனும், இராமனது ஆண்மையை அவள் இன்று மறுத்தமையாற்றான் இந்நிலை நின்றனள் எனக் கொள்ளலே முறை. முன்னர்த் தன்னை வனத்திற்கு உடன்கொண்டேக மனங்கொள்ளாப் பரிவுடைய கொழுநனை நோக்கி,

"இராமரே, விதேக வம்சத்திற் பிறந்தவராயும் மிதிலையின் மன்னவராயும் இருக்கும் எனது தந்தையார், மருமகரான தங்களை எண்ணிப் பெண்ணின் தன்மையும் புருஷவேஷமு முடையவராக நிச்சயிக்க மாட்டாரா? தபிக்குஞ் சூரியனிடத்திற்போல் இராமரிடத்தில் தேஜஸ் இருக்கிறது என்று உலகம் அறியாமையாற் பொய்சொல்லுகின்றது; அவ்வாறு கண்கூடாக அறியப்படாமையால் இராமரிடத்தில் இல்லவே இல்லை"

என்று வடமொழியிற் கேட்ட கொடிய சொற்களை இங்குத் தானே நம்பினாள்போல் சீதை, இலக்குவன் உரைத்தவை யனைத்தையும், பண்டு இராகவன் தாடகையின் மார்பினூ டெய்த பாணம்போல் நெஞ்சிற் றங்கவிடாமல் காதின்வாய் ஓடவிட்டனள். ஆதலின்,

என்றவ னியம்பலு மெடுத்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்தள்
நின்றநின் னிலையிது நெறியிற் றன்றென
வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்

[என்று இலக்குவன் சொல்லவும், அதிகரித்த கோபத்தையுடையவளும், தன்னைக் கொன்றதே போன்ற துன்பத்தையுடையவளும், பதைக்கின்ற மனத்தை யுடையவளும் ஆகி, "நீ நிற்கின்ற இந்நிலை நன்னெறியது அன்று" என்று கொடிய குரூரமுடன் பகைமைபாராட்டிப் பின்னுங் கூறுவாள்—]

ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமக னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை வீழ்ந்துயி ரிறப்பெ னீண்டெனா

[இராமனோடு ஒருநாள் பழகினவர்களும் அவன் பொருட்டுத் தம் உயிரைக் கொடுக்கத் தாழமாட்டார். உடன் பிறந்து வளர்ந்த நீயோ, உன் தமையன் அழிகின்ற தன்மையைக் கேட்டும் அஞ்சாமல் நிற்கின்றாய். வேறு என். நான் இனி நெருப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்—என்று]

காட்டுத்தீயை நோக்கிக் காலெடுத்து வைக்கலானாள். ஆற்றற்கரியவோர் நிலையில் நிற்கின்றான் பாவம் இலக்குவன். மற்று, வான்மீகத்திற்போல் சீதை, தகவிலாச் சொற்களால் வைதிருப்பாளாயின், இவ்விளையோன் தானே தீப்பாய்ந் திறக்க விரைந்திருத்தல் வேண்டும். தேவபாடையில் கூறுவாளிச் சனகன் மாமகள்—

"சுமித்திரை புத்திர, இந்த ஸ்திதியிலிருக்கும் உமது தமையனாரைத் தேடி நீர் போகாமையால் நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்துருப் போலும். என் நிமித்தம் நீர் இராகவர் காட்டில் மாண்டு போகட்டும் என்று இருக்கின்றீரோ? என் மேல் வைத்த ஆசையினால்தான் நீர் இராகவரைத் தேடிச் செல்லவில்லை"

இதனோடு நிறுத்தினாற் சாலுமே. இதுகேட்டுக் கூரியவெம் பகழிபாய்ந்த வேழம்போல் மாழ்கிய இலக்குவன், இராமனது ஆற்றலைச் சாற்றித் தேற்றமுயன்றதோடு காவலில் நின்ற தன் கடனையும் பகர, அம்மாதரசி பின்னும் வெகுண்டு—

"கெட்டவரே, கருணையற்றவரே, கொடியவரே, குடிகேடரே, இராமருக்கு இப்போது நேரிட்ட பெருந் தீங்கு உமக்குச் சம்மதம் போலும். ஆகையாற்றான், அவருக்குத் தீங்கு வந்துவிட்டதென்பது தெரிந்தும் இவ்வாறு பேசுகின்றீர். குரூர மனமும் கெட்ட எண்ணமும் உடைய சத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய செய்கை காணப்படுவது ஆச்சரியமன்று. நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கின்றீர். அல்லது இவ்வாறு செய்யப் பரதர் உம்மை இரகசியமாக ஏவியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நீராவது பரதராவது கொண்ட கருத்து நிறைவேறப் போகின்றதில்லை. குவளை நிறமும் தாமரை இதழ்போன்ற கண்களுமுடைய இராமரைக் கணவராகப் பெற்ற நான் மற்றொரு புருஷனைக் கருதுவேனா! லக்ஷ்மணரே, உமது கண்கள் முன்பாக நான் பிராணனை விட்டுவிடுகிறேன். இதில் ஐயமில்லை. நான் இராகவரையின்றி ஒரு நிமிஷமாவது இவ்வுலகத்தில் உயிரை வைத்திருக்கமாட்டேன்"

மடவரலொருத்தி கடுஞ்சொற்கள் இதனினுங் கொடியன கூறலருமை. ஆயினும், ஜனகன் மாமகள், கோசலைக்கு மருகி, இராமன் தருமபத்தினி, இலக்குவன் கிடக்க, அப்பெரும்புகழ்ப் பரதனுக்கே கொழுந்தி, ஊழித்தீயினும் வெய்ய அம் மொழிகளை வாய் வைத்திசைக்க இசைந்தாள். வெய்தினும் வெய்ய அவ் வாசகங்களைக் கம்பர், "என்னையல் நிற்றியோ வொரு நீ" எனவும், "நின்ற நின்னிலை யிது நெறியிற்றன்று" எனவும் தம் முறைப்படி நொய்தின் நொய்ய சொற்களால் நாற்கலுற்றார். இனி, வடமொழிச் சீதைக்கு இலக்குவன் எதிருரைத்தவைகளும் தெய்வமாக் கவியின் மாட்சியைத் தெரிவிக்கின்றன—

"ஓ, மைதிலி, நீர் இவ்வாறு அநுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்திலுள்ள மாதர்களியல்பு. அவர்கள் பெரும்பாலும் தருமத்தை அறியாதவர்களும் கொடியவர்களும், சிநேகத்தைக் கெடுப்பவர்களுமாக இருக்கிறார். வைதேகி, ஜனக மகாராஜாவின் குமாரியாகிய நீர் சொன்ன இச்சொல்லை நான் பொறுக்க மாட்டேன். அவைகள் என் காதுகளில் காய்ச்சின நாராசங்கள்போல் ஏறின... இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர் கெட்டீர். இனி நான் இராகவர் இருக்கிற இடம் போகிறேன்."

இலக்குவன் எதிருரைத்த இம்மொழிகளில் சீற்றத்தால் கிளர்ந்த வெறுப்பினைக்காணலாம். மாதரைப் பழிக்கின்றான். சீதையை முன்னிட்டுப் பெண்ணெனும் இனத்திற்கே பெரும்பழி சுமத்துகின்றான். "பெண்மையாற் பிழைத்தனை பேதாய்" என்று பின் வாலி தாரைக் குரைக்குஞ் சொற்களின் முன்னொலி போல் நிற்கின்றது இது. வான்மீக முனிவரின் இவ்வகைப்படி இவ்வண்ணம் வெகுண்டுரைத்த இலக்குவன்பால் யாவரும் பரிவே கொள்வாரெனினும், கம்பரது நூலில், எதிரெதிர் பழிக்காமல் பணிந்து மொழிகின்ற இளையோனை வியந்துநனி பாராட்ட வேண்டாதாரைக் காண்டலரிது.

எரியிடை வீழ்ந்து இறப்பென் எனப் பெயர்ந்த சீதையின் திருவடிகளுக்குமுன் தரையுற விழுந்து வணங்கிய இலக்குவன்,

துஞ்சுவ தென்னைநீர் சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலெ னவலந் தீர்ந்தினி
இஞ்சிரு மடியனே னேகு கின்றெனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ

[நீர் இறப்பானேன். நீர் சொன்ன வார்த்தைகளைக் கேட்க அஞ்சுகின்றேன். உமது கட்டளையை மறுக்கமாட்டேன். துன்பத்தை விட்டு இனி இங்கேயே இரும். அடியேன் செல்கின்றேன். கொடிய கோபமுள்ள விதியினை நாம் வெல்லக்கூடுமோ]

போகின்றே னடியனேன் பொருந்தி வந்துகே
டாகின்ற தரசன்ற னாணை நீர்மறுத்
தேகென்றி ரிருக்கின்றிர் தமியி ரென்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினான்

[அடியேன் செல்கின்றேன். இராமனது ஆணையைக் கடந்து என்னைப் போகச் சொல்லிவிட்டு நீர் இங்குத் தனியேயிருக்கின்றீர். கேடு வந்து சேர்வதாகின்றது,—என்று சொல்லிப் பின் கொதிக்கின்ற மனமுடையவனாய் விடைபெற்றுச் சென்றான்]

வேகின்ற சிந்தையன்றிச் சீதையின்பால் சீற்றமோ சிறிது மில்லை; விதியினிற் கடங்கியே விலகுகின்றான் இலக்குவன். ஆயினும், சீற்றங்கொள்ளற் கறியாதானு மல்லன், விதியினிற்கே எஞ்ஞான்று மடங்குகின்ற மதியினனு மல்லன், இவ் விளைய காளை. தன் முன்னோன் கோமுடி சூடாவண்ணம் கேகயன் மாமகள் குறுக்கிட்ட நாள், 'பெண்ணாட்ட மொட்டே னினிப் பேருலகத்து' என்று மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்றானுமிவனே. 'விதியின் பிழைநீ இதற்கென்னை வெகுண்டது' என்று அக்காலம் தேற்றிய இராகவனுக்கு எதிர், "விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி" என்று வீரவாதஞ் செய்து நின்றானு மின்னவனே. ஒருவருக்கு வேறு ஒருவர் தீங்கு செய்தாரேல் அதற் காற்றாமல் வெகுண்டு விதியையும் தானே வெல்லவல்லவனெனு மதியுடன் சீறிய இச் செம்மல் இன்று, தனக்கேயோர் தீங்கு செய்தாரைச் சிறிதேனுஞ் சினத்தலின்றி வெஞ்சின விதியினிற்கு அடங்கிவிடும் இம்முறைமையைச் சீர்தூக்கிக் காட்ட வல்லவர் கம்பர்பெருமானே யல்லாக்கால் யாரேஉளர். தன்பொருட்டால் விளைகின்ற வெகுளியைக் கணமேயுந் தங்காமல் தடுத்தகற்றல் அறமேயாம் என்பதில் ஐயமில்லை யெனினும், பிறரை நலிவோரை வெகுளல் முற்றிலும் மறமே என்னற் கொண்ணாது. ஆறி நின்றது அறன் ஆகாத தருணங்களும் உள. இளைய வள்ளல் அத்தகைச் செவ்வியன். "உன்னை ஒருவன் நலியுங்கால், அளியன் செய்த தீவினையே அன்றில்லாக வந்தாயோ' என்று வைதேகி விரகதாபத்தினிடையே விளம்பிய அவ் வேதவாக்கின் வாய்பாட்டின்படி அடங்குக; மற்று நலிவிற் கிலக்காகுபவன் அயலானாயின், 'விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி' என்னும் வீரமுடன் விஞ்சி, நலிவோரை அடக்கி மெலிந்தோரைக் காப்பது உன் கடன்," எனக் கம்பர் இலக்குவனை முன்னிட்டு நம்மனோர்க்கு அறிவுறுத்திவைக்கின்றார் என்று கொள்ள இடமுளது. இதனைத்தான் தாமஸ் கார்லைல் அனைய மேனாட்டுப் பெரியோர், செம்மைசேர் சீற்றம் (Righteous indignation) என்றழைப்பார். இதன்படி, நினக்கு நேர்கின்ற தீமையெல்லாம் விதியால் விளைந்ததெனுங் கருத்துடன், 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற கொள்கைக் கிணங்கிப் பொறுத்திரு; மற்று, பிறருக்குப் பிறரால் விளையும் தீமைகளையும் இதனுள் அடக்கிச் சும்மா விருந்துவிடல் சிறந்த வேதாந்தம்போல் தோன்றலா மெனினும், இலக்குவன்றன் செம்மையையும் விஞ்சிச்செல்ல நினைத்தே னென்னுஞ் சொல் இயல்புடையதாகாமல், இன்னல்கண் டிரங்காக் கன்னெஞ்சின் காரியமே யாகி முடியலாம். அறத்தின்பால் ஊக்க மில்லாமையையும், செயற்கரிய செய்ய மாட்டா அச்சத்தையும், தம் புல்லிய தலைகளிற் சுமந்து கொண்டுபோய் ஒளித்துக்கொள்ளும் தஞ்சமாக்காமல் இவ்வேதாந்தத்தைத் தன்பொருட்டுமட்டுமே செலுத்திக்கொள்ளும் மேன்மையைச் செவ்விதின் கற்பித்து நிற்கின்றான் நமதருமை இளைய வள்ளல். வான்மீகி முனிவர் இலக்குவனை ஈரிடத்தும் வெகுளவைக்கின்றார். கம்பர்தம் நூலிலோ முறையறிந்து முனிவான் இப் பெருமகன்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 2. களம் 1.

[474-வது பக்கத் தொடர்ச்சி]

அலான்ஸோ:—என்னவிது! எல்லோரும் இத்துணை விரைவில் துயில்போயினரே! (1). என் கண்களும் தம்மோடு எனது எண்ணங்களையும் மூடிக்கொள்ளலாகாதோ (2)?—அவைகள் அதற் குடன்படக் காண்கின்றேன். (3)

ஸபஸ்ட்டியன்:—சித்தம், ஐயனே, நல்கவரும் கனத்த கொடை யிதனை மறுத்துவிடாதே (4). துயரத்தைத் துயிலோ காணவருதல் மிக அருமை (5); வருமாயின் அதுவோர் தேற்றரவாளி யாகும். (6)

அன்டோனியோ:—நீ ஓய்வுகொள்ளுங்கால், நாங்கள் இருவரும், என் தலைவ, உன்மெய்யினைக் காத்துத் தீமை நேராவண்ணம் விழித்திருப்போம்.

அலான்ஸோ:—வந்தனம். ஆச்சரியம் இப்பாரம் (7)

[அலான்ஸோ துயில்கின்றான், ஏரியல் போய்விடுகின்றது.]

ஸபஸ்ட்டியன்:—என்னவொரு விந்தைமிகு உறக்கம் இவர்களை ஆட்கொண்டிருக்கின்றது?

அன்டோனியோ:—இந்தத் தேயத்தின் தன்மை யிது.

ஸபஸ்ட்டியன்: — எனின், நம்முடைய இமைகளை அது அமிழ்த்தாததேன்! நித்திரைவருங் குறியொன்றும் நானே என்னிற் காண்கிலேன். (8)

அன்டோனியோ:—நானுங் காண்கிலேன். என் உணர்வுகள் சுறுசுறுப்பாகி இருக்கின்றன. (9) பேசிக்கொண்டு உடன்பட்டவர்போல் இவர்கள் எல்லாரும் ஒருங்கே சாய்ந்தனர். இடியொன்று வீழ்ந்ததென்ன உதிர்ந்தனர். யாதே அருமை, தகுதியுடைய ஸபஸ்ட்டியன் - ஓ, யாதே அருமை? — வேறு வேண்டா (10). எனினும், நீ யாவதா யிருத்தல் வேண்டுமென்பதை நின்முகத்திற் காண்கின்றேன் என நினைக்கின்றேன்: இச் செவ்வியே நின்னைச் செப்புகின்றது (11); வலிய வென் மனத்தின் பார்வை நின் சிரமீது ஒரு மகுடம் இறங்கவும் காண்கின்றது. (12)

ஸபஸ்ட்டியன்:—என்ன என்ன! நீ விழித்துக்கொண்டிருக்கின்றாயோ?

அன்டோனியோ:—யான் பேசுவது கேட்கவில்லையோ நீ? (13)

ஸபஸ்ட்டியன்:—கேட்கின்றேன்; எனினும், உறக்கத்தில் உரைக்கின்ற மொழியே இது, மெய்; நித்திரையிற் பேசுகின்றாய் நீ. யாது நீ இயம்பலுற்றனை? கண்களை அகலத் திறந்து துயில்போகு மிது வியப்புடை யுறக்கமே; நிற்பது, பேசுவது, அசைவது, மற்று, இத்துணை இறுகத் துயின்று மிருப்பதா! (14)

அன்டோனியோ:—உயர்குலத்துதித்த ஸபஸ்ட்டியனே, உன்னுடைய அதிர்ஷ்டத்தை நீ அயரவிடுகின்றாய்—சாகவேபோலும் (15); விழிப்புடை நிலையினூடே நீ கண்பொத்திக் கிடக்கின்றாய். (16)

ஸபஸ்ட்டியன்:—தெற்றென நீ குறட்டை விடுகின்றாய்; உன் குறட்டைகளுக்குப் பொருளும் இருக்கின்றது. (17)

(1) பேசிக்கொண்டிருந்த கன்ஸாலோ முதலியோர் படுத்து ஒரு நொடியில் உறங்கிவிட்டது கண்டு அலான்ஸோ வியக்கின்றான்.

(2) தானும் துயின்று, புத்திரனை இழந்ததால் வருந்தும் துயருடைய நினைவுகளைச் சற்றே மறந்திருந்தால் ஆகாதா—என விழைகின்றான்.

(3) அதற்குள் அவன், தன் கண்களையும் தூக்கம் சூழ்வதாக அறிகின்றான்.

(4) கனத்த கொடை=நித்திரை. நித்திரை வரும்போது இமைகள் பாரமாகத் தோன்றுமாகையால், கனத்த கொடை எனப்பட்டது. துயருற்றஉனக்கு ஆறுதலுண்டாம்படி உன் கண்கள் நன்கொடையாகத் தூக்கத்தைக் கொடுக்க வருகின்றன. அத் துயிலை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு துயிலக்கடவாய்—என்பது பொருள்.

(5) துயரங் கொண்டிருப்பவர்களுக்குத் தூக்கம் வராது—என்பது பொருள்.

(6) தேற்றரவாளி = துன்பத்திற்கு ஆறுதல் செய்பவன். துன்பப்பட்டோர் துயில் கொள்ளார்; கொள்ளக்கூடுமாயின் அதனால் அவர் துயரம் ஆறுதல் அடையும்.

(7) என் கண்கள் திடீரென்று இப்படி நித்திரையின் பாரம் கொள்வது ஆச்சரியம்—என்கின்றான்.

(8) சடிதியில் உறங்கிவிடுவது இந்தத் தேயத்தின் சீதோஷ்ண நிலைமையால் விளைகின்றதென்றால், நமக்கும் உறக்கம் வரவேண்டுமே. மற்று, எனக்கோ நித்திரை வரவில்லையே—என்கின்றான்.

(9) எனக்கும் நித்திரை வரவில்லை. அதுவும் அன்றி, என் நினைவும் உணர்வும் மந்தமடையாமல் முன்னிலும் அதிகமாகவே வேலைசெய்கின்றன—என்பது பொருள்.

(10) எல்லாரும் இப்படித் துயின்றுகிடக்கின்ற சமயத்தைக் கைக்கொள்வோமாயின், நாம் இப்பொழுது எந்த இலாபத்தைத்தான் எய்த முடியாது,—என, தூங்கும் அரசனைக் கொன்று ஸபஸ்ட்டியன் இராச்சியத்தை அடையும்படி தூண்டவருகின்ற அன்டோனியோ, 'யாதே அருமை' என அதனைக் குறிப்பினால் உணர்த்தி, தொடர்ந்துகூறாமல், "வேறு வேண்டா" என்று நிறுத்திவிட்டு, ஸபஸ்ட்டியனுடைய முகக்குறிப்பை நோக்குகின்றான்.

(11) செவ்வியே நின்னைச் செப்புகின்றது—(செவ்வி - தகுந்த சமயம்) வாய்த்த இந்தச் சந்தர்ப்பமே நீ யாவதாக வேண்டுமென்று உன் சார்பு பேசுகின்றது—என்பதுபொருள். நீயே அரசனாகவேண்டுமென்பது இவ்வேளையின் நோக்கம்போலும்—என்பது கருத்து.

(12) உன் தலையில் ஒரு கிரீடம் சேர்வதுபோல் என் மனோபாவனையால் உணர்கின்றேன்—என்பது பொருள்.

(13) நான் பேசுவதைக் கேட்கும் நீ, நான் தூங்குகின்றேனென்று சந்தேகங் கொள்வானேன் - என்பது பொருள்.

(14) உன் கண்கள் திறந்திருப்பினும், நீ நின்றும் பேசியும் அசைந்துகொண்டு மிருந்தாலும், "என் தலையில் ஒரு மகுடம் இறங்குகின்றது" என நீ இயம்பும் மொழிகளைக் கேட்குங்கால், தூக்கத்தினிடையே நீ பிதற்றுகின்றாய் என்று கருதலாமே யொழிய வேறில்லை. விழித்தவாறே தூங்கும் இத்தூக்கம் விந்தையுடைத்து.

(15) உனக்கு வரவிருக்கும் அதிர்ஷ்டத்தை நீ நாடி அடையாமல் சும்மா இருக்கவிடலாமா. இருப்பாயாயின் எய்திய இவ்வதிர்ஷ்டம் பின் உனக்குப் பயன்படாமல் தொலைந்தே போய்விடும்—என்பது பொருள்.

(16) அரசன் இப்படித் தூங்கிக்கிடப்பதைப் பார்க்கின்ற நீ, இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொள்வதால் நீ அடையக்கூடிய இலாபத்தைக் கண்மூடிபோல் காணாமலிருக்கலாமா—என்பது பொருள்.

(17) நீ பேசுவது தூங்குவோர் விடுகின்ற குறட்டைபோல்கின்றதாயினும், சொற்கள் தெளிவாக இருக்கின்றன; குறட்டையின் ஒலிபோல் பொருளற்றது மன்று நின்பேச்சு—என்பது பொருள்.

அன்டோனியோ:—என் வழக்கத்தினு மதிகம் நானிப்பொழுது கருமத்திற் கருத்துடையவனாயிருக்கின்றேன் (18); எனக்குச் செவிகொடுப்பாயாயின் நீயும் அவ்வாறே இருத்தல்வேண்டும். இருப்பாயேல் அது உன்னை மேன்மேல் மும்மடங் காக்கிவிடும். (19)

ஸபஸ்ட்டியன்:—நன்று, யான் நிற்கின்ற நீர். (20)

அன்டோனியோ:—பெருகுமாறு எவ்வாறென்பதை நான் உனக்குக் கற்பிப்பேன். (21)

ஸபஸ்ட்டியன்:—செய்க; என் பரம்பரைச் சோம்பல் சுருங்குதற்கே எனக்குச் சொல்லித்தருகின்றது. (22)

அன்டோனியோ:—ஓ, இங்ஙனம் நீ இளிவரப் பேசுவதன் அகவயின், காரியத்தைப் போற்றும்விதந்தான் யாதென்றும் (23), அவிழ்க்க அவிழ்க்க அதிகமே அதற்கு அணிகின்றா யென்பதையும், அறிவாயாயின் (24)!—வடிகின்ற மனிதர், உண்மையில் தங்களுடைய அச்சத்தாலோ அல்லது சோம்பலினாலோதான் பெரும்பான்மை அடிவரையில் வறண்டுவிடுகின்றனர். (25)

ஸபஸ்ட்டியன்:—தயைசெய்து மேலே சொல். உன் கண்ணின் நாட்டமும் கன்னமும், உன்னின்று ஓர் பொருளுரையும், ஈனுதற்கு நின்னை நனிமிக வருத்துமொரு பிறப்பும் உண்டென்று விளம்புகின்றன. (26)

அன்டோனியோ:—இவ்வாறு ஐய,—நொய்ய நினைவுடைய இந்தப் பிரபு, மண்ணிற் சேர்த்தபின் அத்துணைச் சிறியதே நினைவில் நிற்கும் இது,—நம்பவைப்பதே அவன் உணர்வும் தொழிலுமாதலால், அரசன்மைந்தன் உயிருடன் இருக்கின்றானென அவனை நம்பச் செய்திருக்கின்றானென்றே கருதவேண்டும் (27). இங்குத் தூங்குகின்றவொருவன் நீந்துவதேபோல் அவன் மூழ்கவில்லை என்பது இயலாததேயாம். (28)

ஸபஸ்ட்டியன்:— அவன் முழுகாம லிருக்கின்றான் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

அன்டோனியோ:—ஆகா! இல்லாத அந்த நம்பிக்கையினின்று எத்துணைப் பெரிய நம்பிக்கை உனக்கு இருக்கின்றது (29)! அவ்வழி நம்பிக்கை இன்மை, வேறோர் வழியில், காணகில்லா ஐயமேயன்றி, பேராசையோ அதனைக் கடந்து யாதும் தன் பார்வையைப் பாய்ச்சமாட்டா வோர் மிகவுயர்ந்த நம்பிக்கையே ஆகின்றது (30). பர்டினண்ட் மூழ்கிவிட்டானென்பதை என்னோடு நீயும் ஒவ்வுவாய் அல்லையோ?

ஸபஸ்ட்டியன்:—அவன் போய்விட்டனன்.

அன்டோனியோ:—ஆயின், நேப்ல்ஸிற்கு அடுத்த உரிமையுடையவர் யார், எனக்குச் சொல்?

ஸபஸ்ட்டியன்:—க்ளாரிபெல்.

அன்டோனியோ: — ட்யூனிஸிற்கு அரசியாயிருக்குளா; மானுட ஆயுளினின்று பத்துக் காவதங்

(18) என்னுடைய வழக்கம்போல் நான் இப்பொழுது விளையாட்டாகப் பேசவில்லை—என்பது பொருள்.

(19) கருமத்தில் கருத்துடையவனாக இருந்து நான் சொல்வதைக் கேட்பாயாயின், நீ இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் மூன்றுமடங்கு உயர்ந்த ஒரு பதவியை அடைவாய்—என்பது பொருள்.

(20) இது இருவிதமாகப் பொருள்படலாம்—ஒன்று, நீர்நிலைபோல் அசையாமல் நின்று நீ சொல்வதைக் கேட்பேன், சொல்—என்பது. மற்றது, நான் நீர்நிலையைப் போல் இப்பொழுது இருக்கின்ற அளவில் இருந்தால் போதும், மேன்மேல் பெருகவேண்டும் என்னும் எண்ணம் எனக்கில்லை—என்பது. இப் பின்னைய பொருளையே ஏற்றுக்கொண்டு அன்டோனியோ பதிற்சொல்ல, ஸபஸ்ட்டியனும் அதற்கிணங்கிப் பின் பேசுகின்றான்.

(21), (22) என் வமிசத்தின் இயற்கையானது சோம்பி இருக்கவே என்னைத் தூண்டுகின்றதாயினும், பெருகுவதற்கு நான் உன்னிடம் கற்றுக்கொள்ளக் காத்திருக்கின்றேன், சொல்—என்பது பொருள்.

(23) நீ இவ்வாறு பரிகசித்துப் பேசுவதாற் பயனில்லை. அதற்கு மாறாக, இப்பொழுது எய்திருக்கும் காரியத்தைக் கைக்கொண்டு செய்யவேண்டியவைகளை முயல்வாயாயின் நலமாம்—என்பது பொருள்.

(24) உன் பேச்சினின்று பரிகசத்தை நீக்க நீக்க, கருமத்தின் தன்மையை நன்கு தெளிந்துகொள்வாய்.

(25) வடிகின்ற மனிதர்—ஆற்றில் நீர் வடிவதுபோல் வரவரக் குறைவடைகின்றவர்கள். மேன்மேல் பெருக முயலாமல் வடியத் தலைப்பட்டால் அடிவரையில் வறண்டுவிட நேரிடும். பெருகி வளர்வதற்கு வேண்டிய சில காரியங்களைச் செய்யச் சிலர் அஞ்சுகின்றனர், சிலர் சோம்புகின்றனர்; இரண்டுமின்றித் துணிந்து செய்தால்தான் முன்னேற்ற மடையக்கூடும்—என்பது பொருள்.

(26) ஆழ்ந்த கருத்தொன்று உன்பால் உளதென்றும், அதனைக் கூறுவதற்கு நீ மிகவும் கஷ்டப்படுகின்றாய் என்பதையும் அறிகின்றேன்—என்பது பொருள். "நின்கருத்தை வெளிக்கொணரப் பிரசவவேதனைப் படுகின்றாய்"—என்கின்றான்.

(27) அன்டோனியோ பேசுகின்ற இவ்வாக்கியங்கள், இதன் முன்னும் பின்னும் நிற்கின்ற வாக்கியங்களைப்போல், பொருள் தெளிவின்றி ஒன்றோடொன்று பின்னிக் குழம்பிக் கிடக்கின்றன. இது இயற்கையே. அலான்ஸோவைக் கொன்று அரசினைக் கவர்ந்துகொள்ளும்படி தூண்டமுயல்கின்ற இப் பெரும்பாதகத்தை வாய்விட்டுக் கூறுவதற்குக் கூசிக்கூசி இவன் இவ்வண்ணம் உழல்கின்றான்.

இவ்வாறு ஐய—என்பது இவன் சொல்லநினைப்பதைத் துவக்கும் மொழி.

நொய்ய நினைவுப் பிரபு—என்பது கன்ஸாலோவைக் குறிக்கின்றது. வயதின் முதிர்ச்சியால் மறதி மிகவும் உடையவன் என்பது பொருள். மண்ணிற்... இது = கொன்று புதைத்தபின், இவன், விடயங்களை எவ்வளவு விரைவில் மறந்துவிடுகின்றானோ, அவ்வளவு விரைவில் அவனையும் மனிதர் மறந்துவிடுவார்; நெடுங்காலம் நினைவில் வைத்திருக்கவேண்டிய தகுதி யொன்றும் இவனிடம் இல்லை—என்பது பொருள்.

இது—கன்ஸாலோவை அலக்ஷியமாய்க்குறிப்பது. நம்பவைப்பதே... ஆதலால், = அரசனுக்கு ஓர் மந்திரக்கிழவன் என்ற முறையில், தான் சொல்வதே தக்கதென எப்பொழுதும் போதித்துப் போதித்து அவனை நம்பும்படி செய்வதே இவனுடைய உணர்வும் தொழிலும் ஆதலால், இப்பொழுதும், பர்டினண்ட் இறக்கவில்லை என்று அரசனை நம்பச்செய்திருக்கின்றான்.

(28) இங்குத் தூங்குகின்றவன் ஒருவனை நீந்துகின்றான் என்று சொல்வது எப்படி இயலாதோ, அப்படியே நாம் மூழ்கக்கண்ட பர்டினண்ட் உயிரோடிருப்பதும் இயலாது—என்பது பொருள்.

(29) பர்டினண்ட் உயிருடன் இருக்கின்றானென்னும் நம்பிக்கை உனக்கு இல்லையானால், அதனிலிருந்து நீ எவ்வளவு பெரிய பதவியை அடையலாம் என்ற நம்பிக்கை உனக்கு உண்டாகவேண்டுமே—என்பது பொருள்.

(30) தெளிவில்லாமற் குழம்புகின்ற அன்டோனியோவின் வாசகங்களில் இதுவு மொன்று.

பேராசையின் எல்லை அரசபதவியை அடைவதாம். அதனிலும் உயர்ந்த வோர் பதவிதான் உளதோவென்பது மிகவும் சந்தேகத்திற் கிடமானது. அவ்வழி நம்பிக்கை

களுக்கப்பால் வசிக்கு மவளா; (31)! கதிரவனை தூதுவ னலன்றி—சந்திரனி லிருக்கும் மனிதன் மிகமந்தன்—(32) புதிதே பிறந்தமோவாய் காடு முரடிட்டுக் கத்திக் குரியதாகும்வரையில் நேப்ல ஸிலிருந்து எவ்விதச் செய்தியும் எட்டமாட்டாத அவளா; (33)! மீண்டுஞ் சிலர் கரைசேரப் பெற்று லும், எவளினின்று நாமனைவரும் திரைவிழுங் கப்பட்டோமோ அவளா! கரைசேர்த்த அவ் விதி யாற்றுனே ஒரு காரியம் முடித்தற்குளது; முன் நிகழ்ந்தவையனைத்தும் அன்னதற்குப் பாயிரமாம். (34) இனி வரவிருப்பது உன்னாலும் என்னாலும் செய்து செலுத்தநிற்கின்றது.

இன்மை வேறோர் வழியில் மிக வுயர்ந்த நம்பிக்கையே ஆகின்றது—என வாக்கியத்தை முடித்துக்கொள்க. பர்டினண்ட் உயிரோடிருக்கின்ற நம்பிக்கை இல்லாமையே நீ அரசனாகக்கூடும் என்ற நம்பிக்கையை உனக்கு உண்டாக்க வேண்டும்.

(31) ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் நடந்து நடந்து எட்டவல்ல எல்லைக்கும் பத்துக்காவதம் கடந்து வசிப்பவள்.

(32) சந்திரனிலிருக்கும் மனிதன், என்பது ஆங்கில மரபில் பித்தன் எனப் பொருள்படும்.

(33) இப்பொழுது பிறந்த ஒரு பிள்ளைக்கு வயதாகி முகத்தில் சிரைக்கும்படி மயிர் முளைக்க எவ்வளவு வருடங்களாகுமோ, அவ்வளவு வருடங்கள் இங்கிருந்து க்ளாரி பெல்லிற்கு ஓர் செய்தி போய் எட்டுவதற்கும் வேண்டும்.

(34) பாயிரம்—ஒரு நூலிற்கு முன் கூறுவது.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

(XI) அப்பரும் சொல்லதிகாரமும்

(a) திணையும் பாலும்

[434-வது பக்கத் தொடர்ச்சி]

பொருளைக் குறிக்கும் சொல்லே திணையும் பாலும் பெறுமன்றி, பொருளுக்குத் திணையுமில்லை பாலு மில்லை என்னும் உண்மையை ஆராய்ச்சியில் நுண்ணறிவு பெற்ற தொல்காப்பியனார் குறிப்பிட்டிருக்க, அதனைப் பவணந்தி முனிவர் பின்பற்றியதாகக் காணப்படவில்லை. நமக்குத் தாய்மாரைக்குறிக்குமிடத்து,ஒருமையில் பெண்பாலாலும், பன்மையிற் பலர்பாலாலும் கூறுவோமாயினும், "தாய்வந்தது" "சேய் சென்றது" என ஒன்றன்பாலால் கூறுவதும் மரபன்றோ? கிளவியாக்கத்தின் முதல்சூத்திரத்தில் "ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" என்பதன் தொடர்ச்சியை நிரூபணமாய்ப் பெயரியலில்

(i) "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்றும்,

(ii) "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகு மென்மனார் புலவர்"

என்றும்,

(iii) "தெருபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு
மிருபாற் றென்ப பொருண்மை நிலையே"

என்றும் பெயரியலுக்கு முன்னுரைகூறி, அவ்வியலின் முடிவுரையாய்

"திணையொடு பழகிய பெயரலங் கடையே"

என்னும் சூத்திரம் கூறினார். உயர்திணை அஃறிணைப் பெயர்கள் விரவுப்பெயராய் இருதிணைக்கும் பயன்படுவதை, கிளவியாக்கத்தின் 10-ம் சூத்திரத்தில் ஒருவாறு குறிப்பிட்டு, பெயரியலில்

'இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையிற்
திரிபுவேறு படூஉ மெல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்த மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே"—என்றார்.
(தொல் - சொல்—172)

இவ் விலக்கண நுண்மையைத் திருநாவுக்கரசின் திகங்கள் சிலவற்றில் நன்றாய்க் காணலாம். முன்னிபாகும் உயர்திணைப் பொருள்களும், படர்க்கையாகும் உயர்திணைப் பொருள்களும், அஃறிணை வினைமுடிவு பெற்றும், முன்னிலைப் படர்க்கை அஃறிணைப் பெயர்கள் உயர்திணை வினைகொண்டும் நிற்பன, அப்பர்தேவாரத்தில் சிறந்த அலங்காரங்களமைந்த பாசுரங்களாம்.

ஞாலமே விசும் பேநலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்றெழும்
சீல மேதிரு வீழி மிழலையுள்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே.

திருவீழிமிழலை, திருக்குறுந்தொகை—3.

மேற்கண்ட பாசுரம் "வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்" என்னும் கிளவியாக்கச் சூத்திரத்தின் புறனடையால் திணைவிராய் வந்து முன்னிலை வினைகோடல், ஒன்றென முடித்தல் என்னும் உத்தியாகும். திணைவிரா யெண்ணப்படும் பெயர் வியங்கோளல்லா விரவுவினையோடு தொடர்ந்து வருவன வழக்கில் உள. மற்றும் உயர்திணைக்குரிய வினை அஃறிணைப் பெயருக்குத் தொடரல், இங்கு வழுவமைதியன்று. வியங்கோள் வருமிடத்து, முன்னிலை அல்லது ஏவல்வினை வருதலும் தேவாரத்திற் காணலாம்.

வண்ண மாக முறுக்கிய வாசிகை
திண்ண மாகத் திருச்சடை சேர்த்தியே
பண்ணு மாகவே பாடும் பழனத்தான்
எண்ணும் நீர்அவ னாயிர நாமமே.

திருப்பழனம், திருக்குறுந்தொகை 3.

இதில் உள்ள செய்புமென் முற்று 'எண்ணும்' என்பது ஏவல்வினையாகக் கொள்ளவேண்டும். ஏனெனில்,

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா
(தொல் - வினையியல் 30)

வியங்கோளெனில்,

முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி
(தொல் - வினையியல் 29)

ஆகவே ஏவல்வினையெனச் செய்புமென் முற்றை இங்குக் கொள்ளல் வேண்டும்.

கலித்தொகை

[492-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 15.

தலைவன் பொருள்தேடும் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்தான். அவன் பிரிவிற்கு வருந்திய தலைவியைத் தோழி நோக்கி, "நங்காய், நம் தலைவர்க்குக் காட்டிடத்தே கருணைசெய்யும்படி, மேகம் சூரியன் வாயுதேவன் என்னும் தெய்வங்களை வணங்கலாமென்றால் அங்ஙனம் செய்தல் நம் கற்பிற்குத் தகுதியன்று, என் செய்வது என்று ஏங்கிக் கூறிக் கூறி, நீ கவலை கொள்ளாதே; நம் தலைவர் மீண்டனர்!" எனக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னினைப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்.

தொன்னலந்தொலைபீங்கியாந் துயருழப்பத்துறந் துள்ளார்
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக்
கன்மிசை யுருப்பறக் கனைதுளி சிதறென
வின்னிசை யெழிலியை யிரப்பவு மியைவதோ?

புனையிழா யீங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய வாரிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ?

ஒளியிழா யீங்குநாந் துயர்கூரப் பொருள்வயி
னளியொரீஇக் காதல ரகன்றேகு மாரிடை
முளிமுதன் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ?

எனவாங்கு

செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமா றேமொழி
வறனோடின் வையகத்து வான்றருங் கற்பினா
ணிறனோடிப் பசப்பூர்த லுண்டென
வறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே!

(தரவு)

(வரி. 1 - 4) பாடு இன்றி - மூடுதல் இன்றி, பசந்த கண் - பொலிவு இழந்த கண்கள், பைதல பனி மல்க - துன்பம் உடையனவாய்க் கண்ணீர் பெருக, வனப்பு ஓடி - நிறம் கெட்டு, வாடுபு - வாடி, வணங்கு இறை வளை ஊர - வளைந்த முன்கையினின்று வளைகள் கழல, ஆடு எழில் அழிவு - வெற்றியையுடைய அழகின் அழிவுக்கு, அஞ்சாது அகன்றவர் திறத்து-அஞ்சாமல் பிரிந்தவரிடத்தில், இனி - இனி, நாடுங்கால் - ஆராயும்பொழுது, நினைப்பது ஒன்று உடையேன்-(யான் செய்ய) நினைப்பதொருகாரியம் உடையேன், அதுவும் தான் மன்-ஆனால் அக்காரியமும் நம் கற்பிற்குப் பொருந்துவதன்றாய் இருக்கின்றதே!

மன் - கழிவு.

(தாழிசை)

(வரி. 5 - 8) தொல் நலம் தொலைபு - முன்னைய அழகு கெட்டு, ஈங்கு யாம் துயர் உழப்ப-இவ்விடத்தில் நாம் பிரிவுத்துன்பத்தால் வருந்த, நம் காதலர் துறந்து-நமது அன்பர் (நம்மைக்) கைவிட்டு, உள்ளார் - நினையாராய், துன்னி - (பொருள்மேல் அன்பு) பொருந்தி, துறந்து - நம்மேல் அன்பு நீங்கி, ஆரிடை - (போகும்) அரிய வழியிலுள்ள, கல்மிசை உருப்பு அற-கற்களின்மீது உண்டான வெப்பம் நீங்கும்படி, கனை துளி சிதறு என - நெருங்கிய துளிகளைச் சிதறுவாயாக என்று, இன் இசை எழிலியை- இனிய ஓசையையுடைய மேகத்தை, இரப்பவும்-பிரார்த்தித்தலும், இயைவதோ - நம் கற்பிற்குப் பொருந்துவதொரு காரியமோ? அன்றே.

இரப்ப என்னும் வினையெச்சம் தொழிற்பெயர்ப்பொருட்டாய் நின்றது.

(வரி. 9 - 12) புனை இழாய் - அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களை உடையவளே, ஈங்கு நாம் - இவ்விடத்தில் நாம், புலம்பு உற - தனிமையுற்றிருக்க, பொருள் வெஃகி - பொருளை விரும்பி, முனை என்னார் - பகைவர் நிலம் என்று நினையாராய், முன்னிய - போதற்கு நினைத்த, ஆரிடை - அரிய வழியிலே உள்ள, சினை வாட - மரக்கிளைகள் வாடும்படி, சிறக்கும் நின் சினம் - அதிகப்படுகின்ற நினது கோபம், தணிந்தீக - தணிக, என - என்று, கனை கதிர் கனலியை - நெருங்கிய கிரணங்களை உடைய சூரியனை, காமுறல் - நாம் வேண்டிக் கொள்ளுதல், இயைவதோ - நம் கற்பிற்குப் பொருந்துவதொரு காரியமோ? அன்றே!

தணிக என்னும் வியங்கோள் 'தணிந்தீக' என வினைத்திரிசொல் ஆயிற்று.

(வரி. 13-16) ஒளி இழாய் - ஒளியினையுடைய ஆபரணங்களை உடையவளே, காதலர் - அன்பர், ஈங்கு நாம் துயர் கூர - இவ்விடத்தில் நாம் துன்பம் மிக, அளி ஒரீஇ - அன்பு நீங்கி, பொருள்வயின் - பொருளின் பொருட்டு, அகன்று ஏகும் ஆரிடை - நீங்கிப் போகும் அரிய வழியிலே, முளிமுதல் மூழ்கிய - காய்ந்த சிறு தூறுகளில் தங்கி வந்த, வெம்மை தீர்ந்து - வெப்பம் மாறி, உறுக என - அவர்மேல் வீசுவாயாக என்று, வளி தரு செல்வனை - காற்றினைக் கொடுக்கும் வாயுதேவனை, வாழ்த்தவும் இயைவதோ - துதித்தலும் நம் கற்பிற்குப் பொருந்துவதொரு காரியமோ? அன்றே!

பிறப்புவகையாற் சிறந்த தேவரோடு மேகமும் சிறப்புவகையால் வைத்து எண்ணப்படுதல் வழக்கு ஆகலின் அது தெய்வம் ஆயிற்று. (தொல் - பொருள், 81)

கற்புடைய மகளிர் தம் கணவரை யன்றி ஏனைய கடவுளர்களைத் தொழுதல் முறைமையன்றாகலான் இங்ஙனம் தலைவி கூறலாயினள்.

(தனிச் சொல்)

என - என்று சொல்லி. ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி - 18. 22) தேமொழி - இனிய மொழியை உடையவளே, செய்பொருள் சிறப்பு எண்ணி - தாம் தேடும் பொருளால் உண்டாகும் சிறப்புக்களை நினைத்து, செல்வார் மாட்டு - போகின்ற தலைவரிடத்தில், இனையன தெய்வத்து திறன் நோக்கி - இத்தன்மையனவாகிய தெய்வங்களின் (நீ வணங்கலாகா) இயல்பினைக் கருதி, தெருமரல் - வருந்தாதே, வையத்து - இவ்வுலகத்தில், வறன் ஓடின் - வறப்புக்காலம் வருமாயின், வான் தரும் கற்பினாள் - (அப்பொழுது) மழையைப் பெய்விக்கும் கற்பினையுடையாளுடைய, நிறன் ஓடி - நிறம் கெட்டு, பசப்பு ஊர்தல் உண்டு என - பசப்பு நிறம் பரவுதல் உண்டாகுமே என்று அஞ்சி, அவர் ஆள்வினை திறத்து - அவர் கொண்ட முயற்சியினிடையே, அறன் ஓடி விலங்கின்று - அறக்கடவுள் ஓடி விலக்கிற்று.

கற்புடைய மகளிர்க்குக் கடவுளரும் குற்றேவல் செய்வர் ஆதலின் 'அறன் ஓடி விலங்கின்று' என்றாள்.

"தேமொழி நீ, 'இயைவதோ, இயைவதோ, இயைவதோ' என்று சொல்லித் தெருமரல் - அறன் ஓடி விலங்கின்று" எனத் தோழி கூறினாள் என்று முடித்துக் கொள்க.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[487-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 4-ம் தசகம்

குறிப்பு:—வல்லின வெழுத்துக்கள் பெரிதும் பயிலாமல், ஸரளமான நெடில்களால்ஆகிய மிருதுவான சொற்களால் நடக்கும் இப் பாசுரங்கள், நல்லிசை தழுவி, இத் தசகத்தில் பரவுகின்ற இரவுபோலும் இருள்போலும் மென்மைவாய்ந்து ஒழுகுகின்றன. இங்ஙனம் பொருளிற்கிணங்க ஒலியும் அமைவதை ஆங்கிலத்தில் Onomatopeia என்பர்.

1-ம் பாசுரம்.

ஊரெல்லாந் துஞ்சி யுலகெல்லா நள்ளிருளாய்
நீரெல்லாந் தேறியோர் நீளிரவாய் நீண்டதால்
பாரெல்லா முண்டநம் பாம்பணையான் வாரானால்
ஆரெல்லே வல்வினையே னாவிகாப்பா ரினியே.

கருத்து:—எல்லாவுயிர்களும் தூங்கி, எல்லா உலகங்களும் இருளாகி, நீர்நிலைகளெல்லாம் கலக்கம் அற்று,தீராதவோர் நீள் இரவாகிக் காலம் நீண்டுவிட்டது. அந்தப் பரம கருணைவள்ளலான எம்பெருமான் வாராமல் ஒழிகின்றார்; என்னை இனிக் காப்பாற்றுவார் ஆர்?—என்று இரங்குகின்றாள்.

பதக்குறிப்பு:—ஆரெல்லே - ஆர் எல் ஏ. எல் ஏ அசைகள். வல்வினையேன் - ஒரு துணையும் இல்லாத பாவியாகிய நான். ஆவி - உயிர்.

குறிப்பு:—முன்சென்ற தசகத்தில், மடலூர்வது என்று இவ்வாழ்வார் நிச்சயித்தாரானாலும் அவ்வாறுசெய்யாமல் மீண்டும் விரஹவேதனைக்கே ஆளாக உடன்பட்டதற்குக் காரணம், மடலூர்வதற்குத் தம் மனத்தை முடுக்கித் துணிவுபெற இயலாமையே ஆகும்.இவர் மிகவும் ஸாதுவாகையால் மானத்தைவிட்டு மடலூர்தல்போன்ற கடிய காரியங்களைக் கைக்கொள்ளமாட்டாமல் மடப்பமும் அச்சமும் தடைசெய்கின்றனபோலும். ஆகையால் ஆழ்வார் இங்கு, தம் மனோபாவத்தையும் தீன நிலையையும், கடவுள் காதலாலே நோவுபடுகின்ற வொரு பிராட்டியின் வாக்கியத்தால் பேசுகின்றார்.

இதற்கு அடுத்த பாசுரத்தில், "நீயும் பாங்கில்லை காண் நெஞ்சமே" என்று தம் மனத்தை நோக்கிக் கழறுவதால், தனக்குத் துணையாகத் தன் தோழி விழித்திருப்பாளென்று எண்ணிக் கூறியதாக இப்பாசுரத்தைக் கொள்ளவேண்டும்.

2-ம் பாசுரம்.

ஆவிகாப்பா ரினியா ராழ்கடல்மண் விண்மூடி
மாவிகார மாயோர் வல்லிரவாய் நீண்டதால்
காவிசேர் வண்ணனென் கண்ணனும் வாரானால்
பாவியே னெஞ்சமே நீயும்பாங் கல்லையே.

பொழிப்புரை:—ஆழ்ந்த கடல், உலகம், ஆகாயம் இவைகளை மூடிக்கொண்டு ஒரு மிகவும் விகாரமான வலிய இரவாய் இருள் நீள்கின்றது. காவிபோன்ற நிறமுடைய என் கண்ணனும் வரவில்லை. (என் தோழியும் உறங்குகின்றாளேயொழிய எனக்கு உதவவில்லை) என் மனமே நீயேனும் திட்பமாயிருந்து எனக்குத் துணைசெய்யாமல் தளர்கின்றா யாகையால் நீயும் உதவமாட்டாய். பாவியாகிய என் ஆவியை இனிக் காப்பவர் ஆர்.

3-ம் பாசுரம்.

நீயும்பாங் கல்லைகா ணெஞ்சமே நீளிரவும்
ஓயும் பொழுதின்றி யூழியாய் நீண்டதால்
காயுங் கடுஞ்சிலையென் காகுத்தன் வாரானால்[தே.
மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்

பொழிப்புரை:—மனமே, நீயும் துணையாக மாட்டாமற் போனாய். இவ்விரவும் விடியுங் காலமின்றி ஊழியாய் வளர்கின்றது பகைவர்களைக் கொன்று அடுத்தவர்களைக் காக்கும் வலிய வில்லையுடைய இராகவன் வரவில்லை. பெண்ணாய்ப் பிறந்து வலிய வினையுடைய நான், இறந்தொழியும் வழியுந் தெரியாமற் கிடக்கின்றேன்.

குறிப்பு:—பெண் பிறந்தே, என்றதால், உனது ஆதீனத்தில் இருக்கும் பெண்ணாகிய நான் உன் அநுமதியின்றி உயிரை விட்டுவிடலாகாது; ஆகையால் அவ்வகையுமின்றித் தவிக்கின்றேன், என்று இந்தப் பிராட்டி நொந்தபடியு மாகலாம்.

4-ம் பாசுரம்.

பெண்பிறந்தாரெய்தும்பெருந்துயர்காண்கிலேனென்
றொண்சுடரோன் வாராதொளித்தானிம்மண்ணளந்த
கண்பெரிய செவ்வாயெங் காரேறு வாரானால்
எண்பெரிய சிந்தைநோய் தீர்ப்பாரா ரென்னையே.

குறிப்பு:—பெண்கள், அதிலும் இப்பிராட்டி, படுந் துயரத்தைக் காணச் சகியாமல் சூரியன் உதிக்கமாட்டேன் என்கின்றான்.—தைத்திரிய உபநிஷத்தில், "பீஷாஸ்மாத் வாதபதே" என்றும், "பீஷோ தேதி ஸூர்ய" என்றும் ஓதியிருப்பது இங்குக் கருதத்தக்கது. "எம்பெருமானிடத்துள்ள பயத்தால் வாயுபகவான் லோகமெங்கும் நடுங்கிச் சலிக்கின்றான். ஸூரியனும் பயந்தே உதிக்கின்றான். பகவானது ஆஞ்ஞையைத் தவறக்கூடாதவன் தான் என்பதை உணர்ந்த சூரியன், அப் பகவானுக்கு அத்தியந்தப் பிரியமான இப்பிராட்டி விஷயத்தில் அவன் வாராதிருக்க, நான் உதித்து இப்பிராட்டிக்கு இடரினை விளைக்கலாமோ" என்ற பயம் சூரியனையுந் தடுத்ததாக ஓர் உரைகாரர் சாதுர்யமாக எழுதியிருக்கின்றார். எனினும் இப்பாசுரத்தின்படி, விரஹியான எல்லாப் பெண்டிர்களிடத்திலுமுள்ள அநுதாபமே சூரியன் வாராமைக்குக் காரணமாகின்றது. இரவோ விடியமாட்டேன் என்கின்றது. மண்ணளந்த என் கார்மேனி வண்ணன் வாரான். பின், அளப்பரிய பெரிய என் சிந்தையாகின்ற நோயிலிருந்து என்னை விடுவிப்பவர் யாவர்.(எண் பெரிய - நினைவை விஞ்சின.)

"ஒண் சுடரோன் ஒளித்தான்" என்பதால், உலகத்திற்கு ஒளிசெய்யுந் தொழிலுடைய சூரியன், தன் கடமையைச் செலுத்த மனமில்லாதவனாய், மடியாலோ பயத்தாலோ தவறுகின்றான் என்று அர்த்தமாகின்றது. சூரியன் உதிப்பதால் தனக்குத் தீங்கில்லை

என்று இப்பிராட்டி நினைத்திருக்கின்றாளாயினும் சூரியனுக்கோ அவ்வண்ணம் நினைப்பு இல்லை. மனதால் தான் அறிந்துகொண்ட இவள் துயரத்தைக் கண்ணால் காணச் சூரியன் விரும்பவில்லை - என்பதும் தாத்பரியம்.

5-ம் பாசுரம்.

ஆரென்னை யாராய்வா ரன்னையருந் தோழியரும்
நீரென்னே யென்னாதே நீளிரவுந் துஞ்சுவரால்
காரன்ன மேனிநங் கண்ணனும் வாரானால்
பேரென்னை மாயாதால் வல்வினையேன் பின்னின்றே.

பதக் குறிப்புக்கள்:—நீர் என்னே என்னாதே - நீர் என்ன என்னாதே - நீ எவ்வாறு இருக்கின்றாய் என்றுகூடக் கேட்காமல். அல்லது இவளுடைய நீர்மை (நீர் - நீர்மை - தன்மை) என்ன மிருதவானது. இவள் எப்படி இத் துயரைப் பொறுப்பாள் என்று பரிந்து பேசாமல். நீளிரவும் துஞ்சுவர் - மனக்கிலேசம் இல்லாமையால் இரவு முழுவதும் என் தாயரும் தோழியரும் தூங்குவார்.

பேரென்னை மாயாதால் வல்வினையேன் பின்னின்றே- துக்கத்தைப் பொறுக்கமாட்டாமற்போனால் இறந்தொழியலாம் அன்றோ—அது நேரவில்லை. நான் இறக்கக் கூடிய தருணத்தில் இருந்தாலும் உயிரோ போக மாட்டேன் என்கின்றது. உயிர் இருக்குமளவு என் பேர் மாயாது. மரித்தால் அல்லவோ, இன்னாள் இறந்துபட்டாள் என்று கூறப்பட்டுப் பிறகு அந்தப் பேரும் மறந்துபோம். உயிர் இருப்பதால் அதுவும் எனக்கு வாய்க்கல்லிலை. இதுவும் நான் செய்திருக்கின்ற கொடிய வினைகளால் அன்றோ!

பொழிப்புரை:—நானோ தனித்திருக்கிறேன். தாய்மார் உறங்குகின்றார். தோழிகளும் அவ்வாறே. கார்மேனிக் கிருஷ்ணனும் வருகின்றான் இல்லை. இறந்துபடல் ஆகாதோ என்னின், உயிர் போகமாட்டேன் என்கிறது. இந்தச் சமயத்தில் என்னை ஆதரித்து ஒருவார்த்தை சொல்ல ஒருவரும் இல்லையே. இதெல்லாம் என் பாவங்களின் கொடுமையே. (Death will be welcome, but life persists).

உயிர் இருப்பதைத் தர்க்கத்தால் அறியலாமே அன்றிக் காரியத்தில் உயிரின் சேஷ்டைகளால் அறியக்கூடவில்லை. சாக்காடு காணாததால் உயிர் இருப்பது அநுமானிக்கத்தக்கது, என்று தர்க்கரீதியில் சாதிக்கப்படுகின்றது-a veritable piece of sophistry.

யாப்பிலக்கணம்

[490-வது பக்கத் தொடர்ச்சி]

பாவினம்—விருத்தம்

முந்திய இதழில் ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை என்பவற்றின் இலக்கணத்தைக் கற்றோம்; இவ்விதழில் பாவினத்துள் ஒன்றாகிய விருத்தத்திற்குரிய இலக்கணத்தைக் கற்போம்.

விருத்தம் என்பவை எல்லாச் சீரானும், எல்லாத் தளையானும், எல்லா அடியானும் நடைபெறும். ஆயினும், அவை அடிதோறும் பெரும்பாலும் ஓரே எதுகையை யுடையனவாகவும், சிறுபான்மை அடியிடையிட் டெதுகையாகவும், முதலிரண்டடி ஓரெதுகையாகவும், பின்னிரண்டடி மற்றோ ரெதுகையாகவும், (இதழ் 6, பக். 95 பார்க்க) ஒத்த சீரானும் ஒத்த அடியானும் வரப்பெறும். ஒத்த சீரான் வருதலாவது முதலடியில் மாச்சீர் நின்ற இடத்தில் மற்ற அடிகளிலும் மாச்சீரும், விளச்சீர் நின்ற இடத்தில் விளச்சீரும், காய்ச்சீர் நின்ற இடத்தில் காய்ச்சீரும், கனிச்சீர் நின்ற இடத்தில் கனிச்சீரும் அமைய வருவதாம். இங்ஙனம் அமைதல் சிறப்புடைத்தாம். சிறுபான்மை இம்முறை பிறழ்ந்து வருதலும் உண்டு. ஒத்த அடியான் வருதலாவது, கவியின் முதலடி சிந்தடியாயின், ஏனைய அடிகளும் சிந்தடிகளாகவும்; அளவடியாயின் ஏனைய அடிகளும் அளவடிகளாகவும்; நெடிலடியாயின், ஏனைய அடிகளும் நெடிலடிகளாகவும்; கழிநெடிலடியாயின், ஏனைய அடிகளும் கழி நெடிலடிகளாகவும் அமைதலாம். இம்முறை பிறழ்தல் கூடாது.

வரலாறு

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
கூவிளம் கருவிளம் புளிமா கூவிளம்
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
கூவிளம் கருவிளம் தேமா கூவிளம்
பல்லக விளக்கது பலருங் காண்பது
கூவிளம் கருவிளம் புளிமா கூவிளம்
நல்லக விளக்கது நமச்சி வாயவே.
கூவிளம் கருவிளம் புளிமா கூவிளம்.

[இச்செய்யுளில் அடிதோறும் மாச்சீர் வந்தவிடத்தில் மாச்சீரும், விளச்சீர் வந்தவிடத்தில் விளச்சீரும் அமைந்திருத்தல் காண்க.]

விருத்தனைப் பால னாகி
கருவிளம் தேமா தேமா 189 150.
விரிநிலா எறிக்குஞ் சென்னி
கருவிளம் புளிமா தேமா
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய
கருவிளம் புளிமா தேமா
நீண்டபுன் சடைகள் தாழக்
கூவிளம் புளிமா தேமா
கருத்தனார் தில்லை தன்னுட்
கருவிளம் தேமா தேமா
கருதுசிற் றம்ப லத்தே
கருவிளம் தேமா தேமா
அருத்தமா மேனி தன்னோ
கருவிளம் தேமா தேமா
டனலெரி யாடு மாறே.
கருவிளம் தேமா தேமா.

[இச்செய்யுளில் அடிதோறும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச் சீர்களாகவும் மற்றச் சீர்கள் மாச்சீர்களாகவும் ஒத்தமைந்திருத்தல் காண்க.]

விருத்தக் கவி—வெளிவிருத்தம், ஆசிரியவிருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம் என நான்கு வகைப்படும்.

1. வெளி விருத்தம்:—வெளி விருத்தம் நான்கடியும் மூன்றடியும் பெற்று வரும்; அடிதொறும் இறுதியில் ஒரு சொல்லே தனிச் சொல்லாய்ப் பொருள் கொண்டு முடியும். தனிச்சொல் ஒவ்வோரடியிலும் பிரித்தலிடப்படும். இவ்வாறு, அமையுங்கால், அடிதொறும் பொருளற்று மண்டிலமாய் வருவன மண்டில வெளி விருத்தம் எனவும், அங்ஙனம் வாராதன நிலை வெளி விருத்தம் எனவும் வழங்கப்படும். இவற்றுள் மூன்றடியால் வரும் வெளி விருத்தம் நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கு இனமாம்; நான்கடியால் வரும் வெளி விருத்தம் நேரிசை வெண்பாவிற்கு இனமாம்.

வரலாறு

1. "சொல்லல் சொல்லல் தீயவை சொல்லல்
—எஞ்ஞான்றும்;
புல்லல் புல்லல் தீநெறி புல்லல்—எஞ்ஞான்றும்;
கொல்லல் கொல்லல் செய்ந்நலங் கொல்லல்
—எஞ்ஞான்றும்;
நில்லல் நில்லல் நீசரைச் சார்ந்தங்—கெஞ்ஞான்றும்."

2. "ஆவா வென்றே அஞ்சின ராழ்ந்தார்—ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்;
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒருசாரார்;
ஏகீர் நாகீர் என்செய்து மென்றார்—ஒருசாரார்."

3. "மாலை மணங்கமழும் மௌவல் முகைவிரியும்
—எந்நைதுன்றம்;
காலை மணிக்குவளை காதலர்போல் கண்விழிக்கும்
—எந்நைதுன்றம்;
நீல மழைமுழங்கி நின்று சிலம்பதிரும்
—எந்நைதுன்றம்."
மாலை மயிலகவ வந்தண் டிவணமே —எந்நைதுன்றம்;

4. "கோமுறை கோடாக் கொற்றவர் ஏறே
—முறையேயோ;
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா —முறையேயோ;
மாமதி வானோன் வழிவரு மைந்தா —முறையேயோ;
தீமைசெய் தாய்போல் செங்கை குறைத்தாய்
—முறையேயோ."

[இவை நான்கடிகளைப் பெற்று, அடிதோறும் பொருளற்று மண்டிலமாய் வந்தமையால், மண்டில வெளி விருத்தமாதலறிக.]

"சேயரி நாட்டமும் செவ்வாயும் அல்குலுமோ
—அம்மானாய்
ஆய்மலரும் தொண்டையும் ஆழியுந் திண்டேரும்
—அம்மானாய்
மாயிருந் தானை மயிடன் தலையின்மேல் —அம்மானாய்
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே —அம்மானாய்."

[இஃது அடிதோறும் பொருளற்றுவாராமையினால், நிலை வெளி விருத்தமாம்.]

1. "உற்ற படையினர் பெற்ற பகையினர்—புறவே;
பெற்றமுடையார் பெருஞ்சிறப் பாண்டகை—புறவே;
மற்றை யவர்கள் மனையிற் களிப்பதே—புறவே."

2. "ஆடு கழைகிழிக்கும் அந்தண் புயலிற்றே
—எந்நைதுன்றம்;
நீடு கழைமேல் நிலாமதி நிற்குமே—எந்நைதுன்றம்;
கூடு மழைதவழும் கோடுயர் சந்தமே—எந்நைதுன்றம்."

[இவை மூன்றடியாய் அடிதோறும் பொருள் முடிந்து வந்த மையால், மண்டில வெளி விருத்தம்.]

"ஏதங்கள் நீங்க எழிலிளம் பிண்டிக்கீழ்—புறவே
வேதங்கள் நான்கும் விரித்தான் விரைமலர்மேல்
—புறவே
பாதம்ப ணிந்து பரவுதும் பல்காலும்—புறவே."

[இது மூன்றடியாய் அடிதோறும் பொருள் முடியாது வந்தமையால், நிலை வெளி விருத்தமாம்.]

தமிழ்ப் பாடம் 76.

அஷ்ட பிரபந்தம்— திருவேங்கடமாலை

[485-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், என்னும் இவ்வெட்டு நூல்களுக்கும் அஷ்ட பிரபந்தம் என்று பெயர். இதனைப்பாடிய திவ்ய கவி பிள்ளைபெருமாள் ஐயங்கார். அழகிய மணவாளதாசர் என்ற பெயருமுடைய இவர் இற்றைக்கு எழுநூறு வருடங்களுக்குமுன் இருந்தவர். திருமாலினிடத்தில் இவர் கொண்டிருந்த அன்பிற்கு அளவில்லை. இவரது பாசுரங்கள் இனிமை மிகுந்திருப்பதோடு தமிழ்ப்பயிற்சி செய்விக்கும் திறத்திலும் மிகச் சிறந்தவை.

அஷ்டபிரபந்தத்தில் திருவேங்கடமாலை என்னும் நூலை இப்பொழுது நமது பாடத்திற்கு எடுத்துக் கொள்வோம். இதுவரையில் கற்றிருக்கின்ற அணிகளின் இலக்கணத்தை இந்நூலில் நன்கு பயிலலாம். சொல், தொடர் முதலிய இலக்கணங்களையும் பயின்று வருவதோடு இவ் வஷ்டபிரபந்தம் முடிவதற்குள் புணரிலக்கணமும் செய்யுளிலக்கணத்தில் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய சில விஷயங்களையும் கற்றுக்கொள்ள இயலும். எல்லாச் செய்யுள்களையும் நாம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ள நினைக்கவில்லை. இங்கு எடுத்துப் போதிக்கப்பெறும் செய்யுள்கள்தவிர மற்றவைகளை ஊக்கமுடையவர்தாமே ஓதிக்கொள்வது நலம்.

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபத நாட்டினான் பையரவின் சூட்டிற்
சிரமபத நாட்டினான் சேர்வு. 1.

பதப்பிரிவு:—பொன்னும் மணியும் பொலிந்து ஓங்கி பார் மகட்கு மின்னும் மணி முடி ஆம் வேங்கடம் ஏ மன்னும் பரமபதம் நாட்டினான் பை அரவின் சூட்டில் சிரம பதம் நாட்டினான் சேர்வு.

பதவுரை:—பொன்னும் - பொன்னும், மணியும் - இரத்தினங்களும், பொலிந்து - மிகவும் விளங்க, ஓங்கி - உயர்ந்து இருப்பதனால், பார் மகட்கு - பூமிதேவிக்கு, மின்னும் - பிரகாசிக்கின்ற, மணி - இரத்தினங்கள் இழைத்த, முடி ஆம் - கிரீடம்போன்ற, வேங்கடம் ஏ - திருவேங்கடமலையே,

மன்னும்-நிலைபெற்ற, பரமபதம் - பரமபதமாகிய, நாட்டினான் - நாட்டை உடையவனும்,

பை - படத்தையுடைய, அரவின் - பாம்பினது, சூட்டில் - கொண்டையில், சிரமம் - நடனம் செய்கின்ற, பதம்—தன்னுடைய பாதங்களை, நாட்டினான்- அழுத்தினவனுமாகிய திருமால்,

சேர்வு - சேர்ந்து இருக்கும் இடம் ஆகும்.

கருத்து:—பூமாதேவிக்குக் கிரீடம்போல் உயர்ந்து விளங்குகின்ற திருவேங்கடமலையேதான், பரமபத நாதனும் காளிங்க நர்த்தனும் செய்தவனுமாகிய திருமால் விரும்பி அடைந்திருக்கின்ற இடம் ஆகும்.

விளக்கம்: — சேர்வு - சேர்ந்திருக்கும் இடம். (யார் சேர்ந்திருக்கும் இடம்? திருமால் சேர்வு). அத்திருமால் எப்படிப்பட்டவன்? நாட்டினான்-வைத்து அழுத்தினவன். எதை நாட்டினான்? பதம் நாட்டினான் - பாதங்களை அழுத்தினவன். எந்தப் பாதங்களை நாட்டினான்? சிரம பதம்-நடனம் செய்வதாகிய ச்ரமம் அல்லது முயற்சியை உடைய பாதங்களை. சிரமபதம் எங்கே நாட்டினான்? சூட்டில்-கொண்டையில். எதன் சூட்டில்? அரவின் சூட்டில் - பாம்பின் கொண்டையில். எதை உடைய அரவின் சூட்டில்? பை அரவின் சூட்டில் - படத்தை உடைய பாம்பின் கொண்டையில்,

படத்தை உடைய பாம்பினது கொண்டையில் தன் நர்த்தனம் செய்கின்ற பாதங்களை அழுத்தினவனாகிய திருமால், இன்னும் எப்படிப்பட்டவன்? நாட்டினான் - நாட்டை உடையவன். எந்த நாட்டினான்? பரமபத நாட்டினான் - பரமபதமென்னும் நாட்டையுடையவன். அப் பரமபதம் எப்படிப்பட்டது? மன்னும் பரமபதம் - நிலைபெற்ற பரமபதம்.

நிலைபெற்ற பரமபத நாட்டை உடையவனும், படத்தை உடைய பாம்பின் கொண்டையில் நர்த்தனம் செய்கின்ற தன் கால்களை வைத்து அழுத்தினவனுமாகிய திருமால் மகிழ்ந்து தங்குகின்ற இடம் எது? வேங்கடமே - திருவேங்கடமலைதான். அவ்வேங்கடம் எது போன்றது? முடி ஆம் வேங்கடம் - கிரீடம் போன்ற வேங்கடம். எதனை இழைத்த முடி போன்றது அவ்வேங்கடம்? மணி முடி ஆம் வேங்கடம் - இரத்தினங்கள் இழைத்த முடிபோன்ற வேங்கடம். எத்தகைய மணிமுடி? மின்னும் மணிமுடி - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள் இழைத்த கிரீடம். யாருக்கு மணிமுடிபோல் வேங்கடமலை இருக்கின்றது? பார் மகட்கு - பூமிதேவிக்கு. எதனால் திருவேங்கடமலை பூமிதேவிக்கு இரத்தின கிரீடம்போல் இருக்கின்றது? ஓங்கி - உயர்ந்திருப்பதால். எப்படி ஓங்கியிருப்பதால்? பொலிந்து ஓங்கி - விளக்கமுற ஓங்கியிருப்பதால். எவை பொலிந்து ஓங்கி யிருத்தலால் வேங்கடம் நிலமகள் மகுடம்போல் இருக்கின்றது? பொன்னும் மணியும் - பொன்னும் இரத்தினங்களும்.

விரிவுரை:—காளிங்கன் என்பவன் ஒரு நாகன். இவன் யமுனையாற்றின் ஓர் மடுவில் இருந்துகொண்டு அதன் நீரை விஷமாக்குவதும் அதில் இறங்குகின்றவர்களைக் கொல்வதுமாக இருந்தான். கிருஷ்ணன் ஈதறிந்து ஒருநாள் அம்மடுவில் குதிக்க, மேலெழுந்த காளிங்கனது தலையின்மீது நடனஞ்செய்து அவனை நசுக்கிவிடும் சமயத்தில் அவன் மனைவியர் வேண்டுகோளிற்கிணங்கி அவனைக் கொல்லாது விட்டான். "பை அரவின் சூட்டில் சிரமபதம் நாட்டினான்" என்பதில் அடங்கியுள்ள கதைக்குறிப்பு இது.

திருவேங்கடமாலை, நளவெண்பாவைப்போல் தொடர்நிலைச் செய்யுள்களால் ஆகிய நூலன்று. ஒன்றோடொன்று கதையினாலேனும் வேறுவிஷயங்களின் சம்பந்தத்தினாலேனும் அர்த்தத் தொடர்புடைய செய்யுள்கள் தொடர்நிலைச்செய்யுள்கள் எனப்படும். திருவேங்கடமாலையில் அடங்கியுள்ள நூறு செய்யுள்களும் அவ்வாறு விஷயத்தினாலேனும் கதையினாலேனும் ஒன்றைப்பற்றி ஒன்று தொடர்ந்திருக்கவில்லை. அதுஅது தன்வரையில் முடிவுபெற்ற பொருளையுடையது. எல்லாம், திருமாலையும் அத்திருமால் உகந்து வைகும் திருவேங்கடமலையையும் துதிக்கும் கருத்து உடையவைகளா யிருக்கின்றன வென்பது அல்லாமல் அவைகளுக்குள் தொடர்பு காணமுடியாது. இப்படி ஒரேவிஷயத்தை முன்னிட்டுப் பல பாடல்கள் அமைந்த நூலுக்கு மாலை என்பது பெயர்.

சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே—போதி
லிருப்பாற் கடலா னிபமூர்ந்தார்க் கெட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு. 2.

பதப்பிரிவு:—சோதி மதி வந்து தவழ் சோலைமலையோடு இரண்டு ஆய் மேதினியாள் கொங்கை நிகர் வேங்கடம் ஏ போதில் இருப்பாற்கு அடல் ஆன் இபம் ஊர்ந்தார்க்கு எட்டா திரு பால் கடலான் சிலம்பு.

பதவுரை:—சோதி - பிரகாசம் பொருந்திய, மதி- சந்திரன், வந்து - வந்து, தவழ் - தவழ்கின்ற, சோலை மலையோடு - திருமாலிருஞ்சோலை என்னும் மலையோடு சேர்ந்து, இரண்டு ஆய் - இணையாகி, மேதினியாள் - பூமிதேவியின், கொங்கை-முலையை, நிகர் - போன்ற, வேங்கடம் - திருவேங்கடமானது,

போதில் - தாமரை மலரில், இருப்பாற்கு - இருப்பவனாகிய பிரம்மனுக்கும், அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆன் - இருஷபத்தையும், இபம் - யானையையும், ஊர்ந்தார்க்கு - வாகனமாக உடைய பரமசிவனுக்கும் இந்திரனுக்கும், எட்டா - எட்டாத, திரு - திருவமைந்த, பால் கடலான் - பாற்கடலில் இருப்பவனாகிய திருமாலினது, சிலம்பு - மலை ஆகும்.

விளக்கம்:—சிலம்பு-மலை. யாருடைய சிலம்பு? கடலான் சிலம்பு. எந்தக் கடலான் சிலம்பு? திருப்பாற் கடலான் சிலம்பு. இத் திருப்பாற்கடலான் எத்தகையவன்? எட்டாத் திருப்பாற் கடலான்? யாருக்கு எட்டாதவன்? போதில் இருப்பாற்கு - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரம்மதேவனுக்கு. இன்னும் யாருக்கு எட்டாதவன்? அடல் ஆன் ஊர்ந்தாற்கு - வலிமை பொருந்திய இருஷபவாகனனை சிவனுக்கு. இன்னும் யாருக்கு? அடல் இபம் ஊர்ந்தாற்கு - வலிமைதங்கிய ஐராவதமெனும் யானைவாகனனை இந்திரனுக்கு.

பிரம்மனுக்கும் சிவனுக்கும் இந்திரனுக்கும் எட்டாத அந்தப் பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலினது மலை எது? வேங்கடமே - திருவேங்கடந்தான்.

அவ்வேங்கடம் எதை நிகர்க்கும்? கொங்கை நிகர் வேங்கடம் - முலையை நிகர்க்கும் வேங்கடம். யாருடைய கொங்கையை நிகர்க்கும்? மேதினியாள் கொங்கை - பூமிதேவியினுடைய கொங்கையை.

திருவேங்கடம் ஒரு முலையாயின், பூமிதேவிக்கு வேறு எதனை மற்ற முலையாகச் சொல்லலாம்? சோலைமலை - பாண்டியநாட்டில் இருக்கின்ற திருமாலிருஞ்சோலை என்னும் மலையை. ஆதலால் இவ் வேங்கடம் அச் சோலைமலையோடு எவ்வாறு இருக்கின்றது? இரண்டாய் - இரண்டாகி. அச் சோலைமலை எத்தகையது? சோதி மதி வந்துதவழ் சோலைமலை-பிரகாசம்பொருந்திய சந்திரன் தவழ்கின்ற திருமாலிருஞ்சோலை மலை.

விரிவுரை:—இத்திருவேங்கட மாலையிலுள்ள செய்யுள்கள் எல்லாம் பெரும்பான்மை ஓரேவிதமான அமைப்பை உடையன. அவை, முன்னிரண்டு அடிகளில் வேங்கடமலையின் சிறப்பைச் சொல்லி, அப்படிப்பட்ட வேங்கடம் திருமாலுக்கு இருப்பிடமாவது என்று கடைசி வார்த்தையைக்கொண்டு முடிகின்றன. அத்திருமாலின் சிறப்பைப் பின்னிரண்டு அடிகள் கூறுகின்றன. வேங்கடமே, என்ற சொல்லிலுள்ள ஏகார இடைச்சொல் வினாப்பொருளிலேனும் விளித்தல் பொருளிலேனும் வந்தது அன்று. ஒரு பொருளும் இல்லாமல் செய்யுளை அசைக்கவருகின்ற ஈற்றசையாகக் கொள்ளலாம். அல்லது, 'இதுவே என்வீடு' என்பதுபோல் பிரிநிலையாகக் கொள்ளலாம். அப்பொழுது, மற்ற க்ஷேத்திரங்களிலிருந்து வேங்கடத்தைப் பிரித்து இவ்வேங்கடத்தில்தான் திருமால் இருக்கின்றாரென அதனைச் சிறப்பித்துக் கூறியதாம்.

இன்னும், முதலிரண்டு அடிகளில் பெரும்பான்மை உவமை, உயர்வுநவிற்சி, சிலேடை, மயக்கம் முதலிய பொருளணிகளும், பின்னிரண்டு அடிகளில் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகளும் அமைந்திருக்கக் காணலாம். பொருளணிகளைப்பற்றி இப்பாடங்களில் விளக்கியுள்ளோம். செய்யுளை அழகுறச் செய்பவைகள் அணிகள். கருத்தின் நயத்தினால் அவ்வழகைத் தருவன் பொருளணிகள். பொருளழகு ஒருபுறம் இருக்க, சொற்களை அமைக்குந் திறத்தினால் மட்டுமே அழகு உண்டாகுமானால் அத்தகைய அமைப்பைச் சொல்லணி என்பர். சொல்லணிகளில் முக்கியமானவை, திரிபு மடக்கு என்னும் இரண்டு. செய்யுள் அடிகளில், ஒரு அடியில் வந்த எழுத்துக்களில் முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் பல அடுத்த அடியிலும் தொடர்ந்து வந்துநிற்கப் பொருள் வேறுபடுமாயின் அவ்வணிக்குத் திரிபு என்று பெயர். எழுத்துக்கள் தாம் ஒன்றாயிருக்கும்; ஆனால் அவை பிரியும்போது வேறுவேறு பதங்களாகிப் பொருள் மாறலாம், அல்லது பதங்களும் உருவத்தில் அப்படியே இருக்கப் பொருள் மாத்திரம் மாறலாம். இந்தச் செய்யுளில், மூன்றாம் அடியில் 'லிருப்பாற்கடலா' என்பதும் நான்காம் அடியில் 'திருப்பாற்கடலா' என்பதுமாகச் சேர்ந்து திரிபு என்னும் அணி ஆகும். இவைகளில், லி, தி என்ற முதல் இரண்டெழுத்துக்கள் தவிர மற்ற ஏழு எழுத்துக்களும் ஒன்றியிருக்கின்றன. ஆயினும் பிரிக்கும்போது, முதலது, 'இருப்பாற்கு அடல் ஆன்' எனவும், பின்னது 'திரு பால் கடலான்' எனவும் வேறுவேறாகப் பிரித்துபொருளும் வேறுபடலாகும். இப்படியே, முன்செய்யுளில் "பரமபத நாட்டினன்,' என்றும் 'சிரமபதநாட்டினன்' என்றும் வருவதால் அதனில் திரிபு அணி அமைந்திருக்கின்றது. முதலெழுத்து வேறாக இருப்பதால் முதல் சொற்களும், பரம என்றும் சிரம என்றும் வேறுவேறாயின. ஆனால் முதலெழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் இவ்விரண்டு தொடர்களில் ஒன்றாயிருப்பது மாத்திரமல்லாமல் பதம், நாட்டினன், என்ற மொழிகளும் ஒன்றே. ஆயினும் அவை அர்த்தத்தில் வேறுபடுகின்றன. இப்படி அர்த்தம் வேறுபட, முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் பல செய்யுள் அடிகளில் திருப்பிவருமானால் அது திரிபு.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக	"	0-12-0
பிருங்காமலக	"	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுதக டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.எ.மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[488-வது பக்கத் தொடர்ச்சி]

1492 [1]பகவனே சிவனு மாலும் வேதனுய
தீயும் பரிதியும் புத்தனுஞ் செப்பும்.
1493 பகல் நுகத்தாணியும் ஒளியும் முகிர்த்தமும்
பானுவு நடுவும் பகலுஞ் செயலும்
[2]பரிவும் பாணியு மிரவு நாளும்.
1494 பகையே யடித்தலுஞ் சார்தலும் பகையும்.
1495 பகங்கொக்கும் யோனியும் பகர லாகும்.
1496 பகழி யம்பும் அம்பின் குதையு மாகும்.
1497 பகுதி கூட்டமும் பகுதியு மாகும்.
1498 பக்கம் பாங்குந் திதியு மன்பும்
சிறகு நட்புஞ் செப்ப லாகும்.
1499 பகர்தல் விற்றலும் பேச லாகும்.
1500 பகடு [3]தோணியும் கடாவு மெருதும்
பெருமையும் யானையும் பேச லாகும்.
1501 பங்கந் தீவினையும் பின்னமுஞ் சேறும்
திரையுந் தூசு முடமுங் குற்றமும்.
1502 பங்கியாண் மயிரும் பிறமயிரு மாகும்.
1503 பங்கய னருக்கனும் பிரமனு மாகும்.
1504 பங்கு முடமும் பாதியுஞ் சனியும்
பகுத்தலு மெனவே பகர லாகும்.
1505 பச்சை மரகதமு மணமு மாலும்
புதனுந் தோலும் புந்தியு நிறமும்
பச்சையு மிலாபமும் பகர லாகும்.
1506 பசும்பை மயிரும் பசும்பையு மாகும்.
1507 பசுமை யெழதமும் பசப்பு மாகும்.
1508 *பசையே லாபமும் ஆசையு மாகும்.
1509 பசுவறி விலாத பாவியும் பசுவும்
சிவனு மெருதுஞ் செப்ப லாகும்.
1510 பஞ்சஞ் சிறுமையும் ஐந்து மாகும்.
1511 பஞ்சரஞ் செருந்தியுங் கூடு மாகும்.
1512 படைபடைக் கலமுங் கலப்பையுந் தானையும்
பல்லணமும் படுக்கையும் பகர லாகும்.
1513 படரே நினைப்பும் வீரரும் பகையும்
பரிவும் புகலுங் கொடியுந் தூதரும்
கோவு நடையும் படர்ச்சியு மாகும்.
1514 படி சோபானமு முவமையு நாழியும்
பூமியும் பகையு மங்க வடியும்
நீரு மெனவே நிகழ்த்த லாகும்.
1515 படகங் [4]கவரி மாவும் பணவையும்
பரணும் பண்ணு மொருவாச் சியமும்.
1516 படுவே நன்மையு நீர்நிலையுங் கள்ளும்
படுக்கையு மடுவு மரத்தின் குலையும்
வெள்ளியு முகரிமையும் விளம்ப லாகும்.
1517 படிவ நோன்பு முடலு மாகும்.
1518 படங்கு மேற்கட்டியுஞ் சீலைக் குடிலும்
கொடியு மெனவே கூற லாகும்.
1519 பட்ட மாயுதமு மேலாம் பதமும்
தூசு மோடையும் பரிசையும் [5]வட்டையும்
மாச்சேக்கையுங் கவரி மாவு நுதலணியும்.
1510 பட்சி குதிரையும் பட்சியு மாகும்.
1521 படுத லொலியு முண்டா குதலும்
பூத்தலும் இன்றாகுதலும் புகுதலும் புகல்வர்.
1522 படலை பரந்தவாய்ப் பறையு மாலையும்
பரியின் [6]கோவையும் படர்தலு மாகும்.
1523 படலிகை பீர்க்கும் பரந்தகைம் மணியும்
பூத்தட்டும் வட்டமும் புகலுவர் புலவர்.
1524 [7]பட்டாரகர் தேவரு மருகரு மாகும்.
1525 படப்பை பசுநிறையுந் தோட்டமு நகரும்
நாடு மெனவே நவிற்றினர் புலவர்.
1526 பட்டு சிற்றூரும் பட்டு மாகும்.
1527 படாமிடு திரையு மாடையு மாகும்.
1528 பட்டிகை கச்சும் பணையுந் தோணியும்
இரதமு மெனவே யியம்புவர் புலவர்.
1529 படுவி கள்ளுவிற் பாளுங் குண்டமும்.
1530 பட்டிமை களவும் வஞ்சமு மாகும்.
1531 படங்கட் செவியின் படமுந் தூசுஞ்
சித்திரப் படமுங் கரிமுக படாமுங்
கொடியு மெனவே கூறினர் புலவர்.
1532 படிறு பொய்யுங் களவும் வஞ்சமும்.
1533 பட்டி நாயுங் களவும் பிள்ளையும்.
1534 பணைபரிப் பந்தியும் வயலும் பருத்தலும்
வேயு முரசு மரக்கோடும் பிழைத்தலும்
படுத்தலும் பெருமையும் பணையும் போதியும்.
1535 பணிதோற் கருவியுஞ் சொல்லுந் தொழிலும்
பணிதலும் பாம்பும் பெருமையும் ஏவலும்.
1536 பண்டி சகடமும் யானையும் வண்டியும்
உரோகணி யுமென உரைத்தனர் புலவர்.
1537 பண்பரிக் கல்லணையும் பண்ணும் பாட்டும்
பப்பு மாழமு மாதர் கூட்டமும்
1538 பண்ணை மகளிர் விளையாடலும் வயலும்
மாதர் கூட்டமு மிருகந்துஞ் சிடமும்
மருத நிலமுந் தண்ணீர்த் தாழ்வும்
சபையுந் தண்ணடையுஞ் சாற்ற லாகும்.
1539 பணம்பொற் காசும் பாம்பின் படமும்
பணமும் பாம்பு மெனப்பகர்ந் தனரே.
1540 பண்ணவன் முனிவனுந் தேவனு மருகனும்
ஆசா னுந்திற லோனு மாகும்.
1541 பண்ணவர் துறந்தோ ருந்தே வருமாம்.
1542 பணவை கழுதும் பரணு மளவும்
புள்ளு மெனவே புகன்றனர் புலவர்.
1543 பண்டம் பணிகாரமும் பொன்னு மாகும்.
1544 பணிலஞ் சலஞ்சலமுஞ் சங்கு மாகும்.

(பிரதி).—1. பகவனுஞ். 2. பிரிவு. 3. தெப்பமுங். 4. கரிவரி. * இச் சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.

(பிரதி)—5. தம்பட்டமும். 6. கோடையும். 7. பட்டாரகன்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

நாறமுபு உயரத்திற்குமேல் தேவாலயங்கள் தவிர மற்றக் கட்டடங்கள் எதுவும் கட்டப்படலாகாது என்றும் அப்படிக் கட்டினால் அம் மனையில் வசிப்பவர் கேடுறுவார் என்றும் பிரமறத் சம்ஹிதை என்னும் நூல் கூறுகின்றது என்று ஓர் ஐரோப்பிய அறிஞர் ஓர் ஆங்கிலப்பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். ஆனால் மேனாடுகளிலும், சிறப்பாக அமெரிக்காவிலும், கட்டடங்கள் வானோக்கி வளர்ந்து வருகின்றன.

* * *

அமெரிக்காவிலுள்ள ஹோப் என்னும் நகரில் வாழும் எவ்லின் வால்வ்ஷ் மாக்லீன் என்னும் மாது தம்மிடம் இருந்த ஒரு நீல இரத்தினத்தை $2\frac{1}{2}$ லட்சம் டாலருக்கு விற்க எண்ணியுள்ளாராம். இந்த நீல இரத்தினத்தைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுவதாவது:—

"இந்த நீல இரத்தினம் யாரிடமிருக்கின்றதோ அவர்குடும்பம் அழிந்துவிடுகின்றது. எவ்லின் வால்வ்ஷ் மாக்லீனின் புருஷர் அமெரிக்க தனவந்தர்களில் ஒருவர். இந்த நீலத்தை அவர் 3 லட்சம் டாலருக்கு வாங்கினார். வாங்கியபின் அவருக்குப் பொருள் நஷ்டம் அதிகம் ஏற்பட்டது. அவரது ஒரே புதல்வன் பத்து வயதுவரை வளர்ந்து இறந்தான். அவரும் மிகவும் ஏழ்மையுற்று இறந்தார். இந்த நீலம் ஆதியில் பர்மாவிலுள்ள புத்த விக்ரஹத்தின் கண்ணிலிருந்து கைப்பற்றப்பட்டது. நிறை 112 காரட்."

* * *

ருஷியாவிலுள்ள லெனின் கிராட் சாஸ்திர ஆராய்ச்சிச்சாலையின் தலைவரான லாசரி என்னும் ரசாயன ஆசிரியர், மனிதன் 180 வயது வரை சாகாமலும், சாகும் வரையில் திடகாத்திரனாயும், இருக்கலாம் என்று கூறுகின்றார். மனித சரீரத்தில் உள்ள நரம்புகளுக்குச் சக்தி உண்டாகும்படி செய்வதால் நரம்புகள் பலஹீனம் அடைவதில்லை என்றும், அன்னதற்கு வழியும் அவர் கூறுகின்றார்.

* * *

இங்கிலாந்திலுள்ள பாங்ஆப் இங்கிலாண்டுக் கட்டடத்தின் வெளி வாயில் கதவு இரும்பினால் செய்யப் பெற்றது. அக்கதவின் நிறை 4 டன். அக் கதவின் சாவி இரண்டுபேர் இல்லாமல் தூக்க முடியாதாம். தினந்தோறும் இரண்டு காவலாளர் அச்சாவியைக் கொண்டு கதவைத் திறப்பார்களாம். ஐரோப்பாவில் எந்த நாட்டிலும் இதைவிடப் பெரிய சாவியில்லையாம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security — for the policyholder from an investment point of view. — for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஏஷியாடிக் கவர்ன்மேண்டு செக்யூரட்டி
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,
(மைசூரில் இணைக்கப்பட்டது.)

பிரதான இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்த இம் முற்போக்கு வாய்ந்த லைப் ஆபீஸ் இணையற்ற மிகவும் குறைந்த செலவில் நவீன அஷ்யூரன்ஸ் திட்டங்கள் யாவற்றையும் அளிக்கின்றது. நோய், விபத்து காலங்களில் சக்தியில்லாமலிருந்தால் அப்போது லாபங்களுடனும், தானாகவே பறிமுதல் செய்யப்பட முடியாத வசதியுடனும் கூடியது. பாலிஸிகள் பறிமுதல் செய்யப்படாமலும், ஆக்ஷேபிக்க முடியாமலும் உள்ளவை. பாலிஸி கெடுவடையும் காலத்தில் சாசுவதமான ஆதரவு கொடுப்பது. ஸ்திரீகளது ஆயுள்களுக்கும் இன்ஷியூர் செய்யப்படும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுக:—

V. ரங்கஸாமி பி. ஏ., பி. எல்.,
ஜெனரல் செக்ரிடரி & மானேஜர்.
பெங்களூர் ஸிடி.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)